6-1

தவத்திரு
## குன்றக்குடி அடிகளார்

# அமுத மொழிகள்

[illegible] பண்ணை

# அமுதமொழிகள்



தவத்திரு

குன்றக்குடி அடிகளார்



தமிழ்ப் பண்ணை
தியாகராய நகரம்,
சென்னை-17.

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1966.
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 1970.

விலை ரூ. 1-50

முல்லை அச்சகம், சென்னை-14.

6—1

## பதிப்புரை

'மூத்தோர் சொல் அமிர்தம்' என்னும் ஒரு பழமொழி உண்டு!

அறிஞர் தவத்திரு அடிகளார் அவர்கள் பேச்சும் எழுத்தும் அமுதத்தை ஒத்த அருள் மொழிகள் ஆகும்.

அவரது கருத்துக்களை ஒன்று திரட்டி 'அமுதமொழிகளாக' வெளிவருகிறது இந்த நூல்.

இனிய கருத்துக்கள், சிந்தனை தரும் முத்துக்கள், அத்துணையும் தேன் துளிகள்.

தமிழ்ப்பண்ணை,
சென்னை-17.

சி. அ. கருணாநிதி,
பதிப்பாளர்.

## சமயம்

எனது பக்தி, அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்தது. மனிதனுக்குப் புதிய உணர்வையும் புதிய தெம்பையும் உண்டாக்கி அவனைப் பூரணத்துவத்திற்கு - உயர்ந்த பரிபூரண வாழ்விற்கு அழைத்துச் செல்வதுதான் எனது சமயம்.

எல்லாம் வல்ல இறைவன் நமக்கு இந்தப் பிறப்பைத் தந்தருளியது பிறருக்குச் சேவை செய்து பேறு பெறுவதற்காகத்தான். எனவே பிறருக்குச் சேவை செய்து பேறு பெறுவதுதான் பிறவியின் பயன் - சமயத்தின் சாரம்!

இறைவன் சோறு போடமாட்டான்; நிச்சயமாகப் போடமாட்டான். அவன்தான் சோற்றை உண்டாக்கிக்

கொள்ள நிலம், நீர், அறிவு, ஆற்றல், உழைக்கக் கைகள் அனைத்தும் கொடுத்திருக்கிருனே !

மனிதகுலம் இன்ப அன்பிலே திளைத்து இன்புற்று வாழவே இந்த உலகம் - பேசும் மொழி - ஒழுகும் சமயம் யாவும் !

அரசியல் என்பது சமுதாயத்திற்கு ஒரு வேலி போல. சமயம் என்பது மனிதனுக்கு உள்ளும் புறமுமாக இருந்து அவனை உணர்வால் - சிந்தனையால் தூண்டி வளர்த்துப் பக்குவப்படுத்துகின்ற ஓர் அரும்பெரும் சாதனம்.

சுவையால் கனிக்குச் சிறப்பு ஏற்படுவது போல, மணத்தால் மலருக்குச் சிறப்பு ஏற்படுவது போல, நீரால் ஆற்றுக்குச் சிறப்பு ஏற்படுவது போல அவனுடைய ஆன்மாவின் தரத்தினுலும் - தகுதியினுலும் (கருத்தாலும் - உணர்வாலும்) மனிதனுக்குச் சிறப்பு ஏற்படும் !

இன்றைய அறநிலையங்களில் அங்குள்ள நகைகள், தங்கம், வெள்ளி, வைடூரியம் ஆகியவைகளுக்கு வகை வகையான பட்டியல்கள் இருக்கின்றன. ஆனுல் அவ்வறநிலையங்களைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழும் பக்தி நலஞ் சான்ற அடியவர்கள் பட்டியல் இல்லை. அங்கு வரவு செலவைத் தக்கவாறு சரிசெய்து வளமூட்டத் தணிக்கை

யாளரைக் காண்கின்ருேம். ஆனுல், அங்கு வரும் அடியவர்கள் வாழ்வைச் சீராக்கி வளமூட்டத் தணிக்கையாளர்கள் இல்லே. மேன்மைகொள் சைவநீதி தழைத்தோங்கத் தங்கம் வெள்ளி வைர நகைகளின் பட்டியலும் வரவு செலவுத் தணிக்கையுமா தேவை! அடியவர்கள் பட்டியலும் அவர்கள் வாழ்வில் வளமூட்டும் தணிக்கையுமல்லவா தேவை.

❋

நம்மைப்பற்றி நாம் சரியாகப் புரிந்துகொண்டால் தான் நாம் இறைவனேப்பற்றியும் புரிந்துகொள்ள முடியும். நம்மை நாம் சரியாகப் புரிந்துகொள்ள நமக்குத் துணே நின்றுதவுவது சமயம்.

❋

குறைகள் நிறைந்த மனித சமுதாயம் நிறைவுடைய இறைவனின் திருவருளே - திருவருள் இன்பத்தை நோக்கிப் பயணம் செய்வதே இலட்சியத்துடன் கூடிய வாழ்க்கை.

❋

பிறரை வாழ்விப்பது எனது கடமை என்ற கருத்தை வளர்ப்பது சமயத்தின் அடித்தளமான நோக்கம்.

❋

அறம் வேறு சமயம் வேறல்ல. கைகால் எல்லாம் சேர்ந்ததுதான் உடம்பு. அவை உடம்பின் உறுப்புக்கள். அவை இல்லாவிட்டாலும் ஒருவன் வாழ்ந்துவிடலாம்.

இதயம் இல்லாமல் மனிதன் வாழ முடியுமா? இதயம் வேறு மனிதன் வேறல்ல. மனித வாழ்வுக்கு இதயம் போல சமயத்திற்கு அறம். ஆகவே, அறம் வேறு சமயம் வேறல்ல. அறமே சமயம் - சமயமே அறம்!

மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்வதற்காக - மனித குல ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்காகத் தோன்றியதே சமயம். ஆனால், காலப்போக்கில் அது கடவுளுக்கே என்று ஆக்கப்பெற்றுவிட்டது. சமயம் மக்களுக்காக என்றிருப்பதுதான் நியாயமானது!

உலகில் ஈ, தேனீ ஆகிய இரண்டையும் நாம் பார்க்கிறோம். ஈ மலத்திலும் உட்காரும், மலரிலும் உட்காரும். ஆனால் தேனீ மலரில் மட்டுமே உட்காரும். ஈ நமது ஆரோக்கியத்திற்குக் கேடு பயப்பது. தேனீயோ ஆரோக்கியத்திற்கு உதவும். தேனைச் சேகரித்துத் தருகிறது. ஈயை ஒழிக்க முயல்கின்றோம். தேனீயை வீடுகளிலேயே வளர்க்கிறோம். மனிதனின் மனம் ஈ போல இருக்கிறது. அதைத் தேனீ போல மாற்ற வேண்டும். அதாவது நல்லது நினைக்கவும் — செய்யவுமே பழக்க வேண்டும். இந்த முயற்சியுடைய வாழ்க்கைக்கு சமய வாழ்க்கை என்று பெயர்.

இன்று திருக்கோயில்களுக்குக் கூட்டம் வருவதாகப் புலர் கருதுகின்றனர். அக்கருத்துத் தவறானது. ஏனெனில்,

வரவேண்டியவர்கள் எத்துணை பேர் என்று தெரிந்தால் அல்லவா வந்தவர்களின் எண்ணிக்கை நிறைவுடையது தானா என்று மதிப்பிட முடியும் ?

❋

உண்மையான சமயம் ஒருபோதும் சமதர்மத்திற்கு மாறுபட்டதல்ல. சாதி, குலம், பிறப்பு என்ற எல்லைகளைக் கடந்ததே சமயம். இறைவன் எல்லா உயிர்வர்க்கங் களுக்கும் தாயும் தந்தையுமாக — அம்மையப்பனாக இருக் கின்றான் என்பது சமயநெறியின் தத்துவம். அப்படியானால் அவன் எப்படி உயிரினங்களிலே தாழ்வுயர்வுகளை—மேடு பள்ளங்களை அங்கீகரிப்பான் ? ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய அப்பரடிகள் சமதர்மத்திற்கு விரோதமான பிரிவு உணர்ச்சிகளை, அப்பட்டமான தன்னல வாழ்க் கையைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

❋

ஆன்மீகத்தின் அடிப்படை எண்ணம் தன்னை அறித லாகும். ஆன்மாவைப் பற்றி அறிதல் ஆத்மீகம். அதாவது உயிரியலைப்பற்றிய அறிவு.

❋

கூட்டுச் சிந்தனையும் கூட்டு வேலைத் திட்டமுமே தனி மனித முன்னேற்றத்திற்கும் சரி - சமுதாய முன்னேற்றத் திற்கும் சரி – தத்துவங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிக்கும் சரி வெற்றி தரக்கூடியனவாகும்.

திருக்கோயில்களில் இறைவன் முன் படைக்கப் பெறுகின்ற திருவமுதை இறைவன் உண்ணுமலிருப் பதற்குக் காரணம் தனது மக்களிற் பலர் உண்ண முடியாத நிலையில் இருக்கிருர்கள் என்பதுதானே ?

❋

வாழ்வாங்கு வாழ்வது என்ருல் என்ன பொருள் ? முறையாக உண்டு உடுத்து வாழ்வதாகுமா ? இல்லை. வாழ்க்கையின் குறிக்கோளை அடைகிற வழியில் பயனுடைய வாழ்க்கை வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல். வாழ்க்கையைப் பொருளோடு கூட்டி, அறத்தோடு அணைத்து, இன்பத்தோடு இணைத்துப் பின் விலகி வீடு பெறும் வேட்கை வழி நின்று வாழ்வதே முறையான வாழ்க்கை.

வீடு என்ருல் விடுதலை பெற்று வாழும் இடம் என்று பொருள். துன்பத்தினின்றும் விடுபடுதலே விடுதலை என்பது. துன்பத்திற்குக் காரணம் பிறப்பு. பிறப்பிலிருந்தும் அதனைத் தொடர்ந்துவரும் துன்பங்களினின்றும் விடுதலை பெறுதலே வீடு - வீடுபேறு.

❋

இந்த உலகத்தைப் போற்ற வேண்டும். இவ்வுலக உயிர்களுக்குத் தொண்டு செய்யவேண்டும். அது ஒரு சிறந்த வழிபாடு.

❋

சிந்தை திருந்திலொழியச் செயல் திருந்த வழியில்லை ; சிந்தையைத் திருத்தும் ஆற்றல் சமயத்திற் குத்தான் உண்டு.

பழைய காலத்தில் கோயில்கள் சமுதாயத்தின் எல்லா நலன்களேயும் காக்கின்ற மைய நிலேயங்களாக விளங்கின. அதனுல்தான் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியும் எழுந்தது. இன்று கோயில்கள் தம் கடமையை மறந்து வணிக நிலேயங்கள் போலாகிவிட்டன. நமது சமூக இளைஞர்கள் அனைவரும் திரண்டெழுந்து, கோயில்களை மீண்டும் சமூகத்தின் மையமாக்கி, கண்ணீர் துடைக்கும் கருணை நிலேயங்களாக மாற்றப் புரட்சி செய்யவேண்டும்!

உலகியல் எண்ணங்கள் அதிகமாகி வாழ்வியல் வெப்பமடைந்து போகும் காலத்துச் சமயம் மக்களின் காட்சிக்கு அல்லது வாழ்க்கைக்கு வருவதில்லே. உலகியல் வெப்பம் தணிந்தபிறகு சமயம் மீண்டும் மக்கள் வாழ்க்கைக்கு வருகிறது. இதுவே சமயநெறியின் சுழல் வரலாறு!

உலகிலேயே மிகச்சிறந்த சமயம் சைவசமயம். மார்க்சீயத்திற்கும் நமக்கும் 35 அல்லது 40 விழுக்காடுதான் வேறுபாடிருக்கும். அதுவும் கடவுளுண்மையில். இந்த வேறுபாட்டிற்குக் காரணம், மார்க்ஸ் பிறந்த நாடு - அவர் பேசிய மொழி - அவர் வாழ்ந்த சமுதாயம் ஆகியனவே. மார்க்ஸ் நமது தமிழகத்தில் தோன்றியிருந்தாராகுல், இந்த வேறுபாடும் இருந்திருக்காது. அந்த அளவிற்கு நமது சைவ சமயம் உயிருண்மை - உயிர்களின் உரிமை ஆகியனபற்றி வலியுறுத்துகிறது.

சமுதாயத்தில் எங்கெங்கு அழுகைக்குரலும், அவலக்குரலும் எழுந்ததோ அங்கெல்லாம் உடனடியாக விரைந்து சென்று அந்த அழுகைக் குரலையும், அவலக் குரலையும் நமது ஞானச் செல்வர்களான திருநாவுக் கரசரும், ஞானசம்பந்தரும் மாற்றி இன்பம் தந்தருளி னார்கள். சமுதாயத்தின் அழுகுரலை மாற்றுவது இறை வனுக்கு உவகையைத் தரும் என்று கூறினார்கள் - செய்தும் காட்டினார்கள்.

பண்பட்ட சமய ஒழுக்கமுடையவன் மறந்தும்கூட மற்றவர்களிடம் பகையோ காழ்ப்போ கொள்ளமாட்டான். உயிர்களிடத்து அன்பு காட்டுவதுதான் உயர்ந்த சமய ஒழுக்கம்.

சமுதாயத்தின் அன்றாடச் சிக்கல்களில் அக்கறை காட்டித் தீர்த்துவைக்க வேண்டிய பொறுப்பு மற்றெல்லாத் துறைகளையும்விடச் சமயத்துறைக்கே அதிகம் இருக்கிறது.

உலகத்தின் வைப்புக்கள் அனைத்தும் பொதுமை; அவற்றை எல்லோரும் அனுபவிக்க வேண்டும் என்பதே உயர்ந்த - மிக உயர்ந்த சமய ஒழுங்கு.

மனிதன் நடப்பதற்கு இரண்டு கால்கள் தேவைப் படுவது போல, மனித வாழ்க்கைக்குக் கடவுள் நம்பிக் கையும் தன்னம்பிக்கையும் தேவை. கடவுள் நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் நாணயத்தின் இருபுறங்கள் போல.

அடியவர்கள் ஆண்டவனிடம் இரப்பதில்லை. அடியவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்க அவன் கடமைப் பட்டவன். அடியவர்கள் இறைவனிடம் தங்கள் தேவையைப் பெற்றுக்கொள்வது உரிமையின்பாற்பட்டது.

மனிதனை மனிதனாக மதித்து வாழவைக்கும் உண்மைச் சமயத்தையே நாம் விரும்புகின்றோம்.

சமயம் என்பது மனிதனுடைய இதயத்தில்தான் அரும்புகிறது.

சித்தத்தை அடக்கி, அதன்மூலம் புலன்களை அடக்கினால் ஞானத்தைப் பெறலாம். சித்தத்தை அடக்காமல் பொறிகளை மட்டும் அடக்கினால் சோம்பேறித்தனம்தான் வளரும். சோம்பேறித்தனம் வளராமல் புலன்களுக்கும் பொறிகளுக்கும் வேலை கொடுப்பதற்கே நம் நாட்டில் திருக்கோயில் வழிபாடும் - திருத்தொண்டும் தோன்றின. புலன்களையும், பொறிகளையும் ஒருசேரப் பக்குவப்படுத்தும் நெறிதான் சமய நெறி.

வாழ்க்கையை விட்டு விலகிய சமயம் பயன் தராது ; சமயச் சார்பற்ற உலகியல் உறுதி பெறாது - அது பரிபூரண நன்மையாகவும் இருக்க முடியாது. சமுதாயத் தொடர்பில்லாத சமயம் காலவெள்ளத்தில் மறைந்து போகும்.

நல்ல சமையல்-ஆரோக்கியமான உணவு, மருத்துவ மனைகளை இழுத்து மூடும்; நல்ல சமயப் பண்பு சிறைச் சாலைகளையும் காவலர் நிலையங்களையும் இழுத்து மூடும்.

சமயப் பற்றைப் போலவே நாட்டுப்பற்றும் முக்கிய மான ஒன்றாகும். ஆன்மஞானம் வளர வேண்டுமென்றால் அந்த ஆன்மாவையுடைய மனிதன் வாழும் நாடு செழிக்க வேண்டும்.

சமயம் ஒரு தத்துவம்—கொள்கை-வாழ்க்கை முறை. அது மனித சமுதாயத்தை நிலைக்களனாகக்கொண்டுதான் வளரமுடியும். எந்த ஒன்றும் விளக்கம் காட்டுவது ஒன்றன் சார்பிலே நின்றேயாம். அது போல, சமய விளக்கம் சமுதாயத்தின் வாழ்க்கைப் போக்கின் மூலம் விளக்கம் காண்பது.

தொண்டின் வாயிலாக மனிதனைப் பக்தியுலகிற்கு அழைத்துச் செல்வது மிகவும் எளிது. எனவே சமய வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது தொண்டு நெறி.

## சமூகம்

பெண்களின் சொத்துரிமை பறிக்கப்பெற்ற பிறகு பெண்கள் அடிமைகளானுர்கள். அவர்கள் உயிருள்ள பாத்திரங்களாக கருதப் பெற்ருர்கள்.

❋

சாதியுணர்ச்சி சமுதாய முன்னேற்றத்திற்கு ஒரு மா பெரும் முட்டுக்கட்டை. மனிதர்கள் ஒருவரோடொருவர் இணைந்தும் பிணைந்தும் வாழ்வதற்கு இடையூருக இருக்கிற சாதிகுல வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் ஒழிந்தாலன்றிச் சமுதாயத்தில் அமைதி நிலவாது ; இன்பம் மலராது.

மனிதன் உள்ளுணர்வுகளை வெளிக் காட்டக் காரியங்கள் செய்கிறான். நாம் இறைவனுக்குப் பூ, நீர், கனி ஆகியன தருகின்றோம். இவை இறைவனுக்கு விருப்பமானவை என்ற அடிப்படையில் அல்ல. இறைவன் இவற்றை விரும்புவதுமில்லை. இறைவன் மலர் போன்ற மனத்தையும், தண்ணளி மிக்க நெஞ்சையும், கனிந்த உள்ளத்தையுமே மனிதர்களிடமிருந்து எதிர்பார்க்கிறான். இது தான் பொருள். நமக்கும் மலருக்கும், நமக்கும் தண்ணீருக்கும், நமக்கும் கனிக்கும் உள்ள இடைவெளியை எண்ணிப் பாருங்கள். இறைவன் எப்படி நம்மை மகிழ்ந்தேற்பான் ?

ஒருவருக்கொருவர் மாறிக் கவலைப்படுகிறவர்களே நல்ல மனிதர்கள். தங்களைப் பற்றியே கவலைப்பட்டுக் கொள்ளுபவர்கள் சுயநலவாதிகள். மாறிக் கவலைப்படுகின்ற மனிதர்கள் நிரம்பிய சமுதாயத்தில் எல்லோரும் நலமாக வாழ்வார்கள். அமைதியும், அன்பும், இன்பமும் அங்கு குடிகொண்டிருக்கும்.

நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் செய்யும் பிரார்த்தனையில் மனித குலத்தில் இன்ப அன்புணர்ச்சி பெருகி அவ்வழி சமுதாயம் இனிது வாழவேண்டும் என்ற நினைப்பைக் கலக்க வேண்டும்.

மனிதன் கோயிலுக்குள் சென்று ஆண்டவன் முன்னிலையில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவது தவிர

இங்கு யாரும் சோற்றுக்காகவோ துணிக்காகவோ கண்ணீர் சிந்தும் நிலை இருக்கக்கூடாது.

இறைவன் அருச்சனை வயலுள் வில்வமலர்க்குவியலுக்குள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிருன். அவனுக்குத் தேவையான ஒன்றை வயலுக்குள் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை. தனது அருமைத் தொண்டர் மாணிக்க வாசகரிடம் தெரிவித்தான். அவர் மற்றவர்களிடம் அருச்சனை வயலில் அன்பு விதையிட மறந்துவிடாதீர்கள் என்று கூறினுர்! எனினும் மறதி போனபாடில்லை.

மனித சமுதாயம் மேம்பாடுடையது; விலை மதிப்பில்லாத பெருமையுடையது; இயற்கையும் கடவுளும் கூட மனித சமுதாய மேம்பாட்டின் மூலம்தான் பெருமை பெறுகிறது.

எண்ணங்களே மனிதனைச் செலுத்தும் மின் ஆற்றல். அந்த எண்ணங்களை உறுதியுடையனவாக—ஆக்க வழிப் பட்டனவாக—தூய்மை நிறைந்தனவாக—திருவருட் சார் புடையனவாக அமைத்துக்கொள்ள முயல்வதிலேயே நமது வெற்றி யிருக்கிறது.

சமுதாயத்தின் தீய சக்திகளாக விளங்குகின்ற வகுப்புவாதம், ஏகபோகம், பிரிவினை சக்திகள் ஆகியவை

களைச் சமுதாயத்திற்கு இனங்காட்டித் தனிமைப்படுத்தி ஒதுக்கி ஒழித்தாக வேண்டும்.

நாடு வயல் என்றால் குடும்பம் ஒரு வாய்க்கால். நாட்டிலுள்ள குடும்பங்கள் கெட்டால்—குடும்பங்களுக்குள் உள்ள உறவு கெட்டால் நாடு கெடும்.

சோற்றுக்கும் துணிக்கும் பஞ்சமின்றி மனிதன் வாழ வேண்டும்; அதற்குச் சமுதாயம் அவனுக்கு உத்தரவாத மளிக்க வேண்டும். சோற்றுக்கும், துணிக்கும், இன்ன பிற அடிப்படைத் தேவைகளுக்கும் உத்தரவாதமளிக்காத சமுதாயத்தில் பேராசை, போட்டி, பொறாமை முதலியன இருந்துகொண்டேதான் இருக்கும்.

## மொழி

எனக்கு எந்த மொழியின் மீதும் வெறுப்புக் கிடையாது. எல்லா மொழிகளின் மீதும் பற்றுண்டு. ஆனுலும் தமிழ் மொழியின் மீது கொஞ்சம் அதிகப் பற்றுண்டு. ஏனெனில் எனது சிந்தனையைத் தூண்டிவிட்டு, எனது உள்ளத்தில் ஒரு கருத்தை உருவாக்குகின்ற மொழி என் தாய் மொழிதானே! எனவே, என் தாய் மொழி மீது நான் பற்றுக்கொள்வது - பாசங்காட்டுவது குற்றம் - பாவம் என்று யாராவது கூறமுடியுமா?

❋

கல்வி பயிலும் மாணவர்கள் தாங்கள் தேர்வில் வெற்றி பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் படிக்கக் கூடாது. அவர்கள் மாணவர்களாக இருக்கும்போதே, பொது அறிவை நன்ருக வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் அவர்களும் பயன் பெறுவர்; இந்த நாடும் பயன் பெறும்.

தமிழன் என்றைக்குத் தமிழினம் ஒன்று என்று கருத இன ஒருமைப்பாட்டுடன் வாழ்கிருனோ அன்றுதான் தமிழ் உலகப் பொதுமொழியாக வரமுடியும்.

சிந்தனையைத் தூண்டி வளர்ப்பதற்குரிய தாய்மொழியிலிருந்து மனித இனத்தைப் பிரிப்பது அள்ளிச் சாப்பிடுதற்குரிய கையை வெட்டி யெறிவது போன்றது-நீரிலிருந்து மீனைப் பிரித்தெடுத்துக் கரையிலே எறிவது போன்றது.

நாம் பெறுகிற படிப்பு, கல்வி, அறிவு, பண்பாடு அனைத்தும் ஒழுக்கத்திற்காகத்தான். எனவே, ஒழுக்க நெறியை நாம் பேணிக் காக்க வேண்டும். அப்போதுதான் நாம் பெற்ற படிப்புக்கும், கல்விக்கும், பண்பாட்டுக்கும் சிறப்பு.

மலர்த்தேன் உடல்மலம் நீக்கும் ; மணிவாசகத்தேன் உயிர்மலம் நீக்கும்.

பெரும்பாலான வரலாற்ருசிரியர்கள் கருத்துப்படி சமஸ்கிருதம் இந்தியாவுக்குள் மத்திய ஆசியாவிலிருந்து

வந்த ஆரியர்களுடைய தாய் மொழி என்றே கருதப்பெறு கிறது. அவர்கள், இந்த நாட்டுக்கு வந்தவுடன் இந்த நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் பரவிக் குடி யேறினர்கள்.

அவ்வம் மாநிலத்து மொழியையே தத்தமது தாய் மொழியாக ஏற்றுக்கொண்டு வாழத் தலைப்பட்டனர். இத னுலேயே சமஸ்கிருதம் பேச்சு வழக்கிலிருந்து விலகி இருக்கலாம். கிரந்த எழுத்துக்களையுடைய சமஸ்கிருத மொழி செய்யப்பட்ட மொழி. அதுவும் தமிழர்களாலேயே செய்யப்பட்ட ஒரு மொழி. சமய மரபுகளைப் புனிதமான தாகவும், மறை பொருளாகவும் வைத்துக் காப்பாற்றுதற் கென்றே அம்மொழியைத் தோற்றுவித்துக் காப்பாற்றி வளர்த்ததாகக் கருதலாம்.

நூல்நிலையத்திற்குள் பாம்பை நுழையவிட்டால் கூடப் பரவாயில்லை. நமது பண்பாட்டை, ஒழுக்கத்தை, உணர்வைக் கெடுக்கின்ற நூல்களை நுழையவிடக் கூடாது.

சமுதாயம் வளர்ந்தால்—வாழ்ந்தால்—அந்தச் சமுதா யம் பேசுகின்ற மொழி வளரும்—வாழும். மொழி வளர்ந் தால் கருத்து வளரும். கருத்தைப் பற்றிக் கவலைப்படாத வர்கள் – கருத்து வேட்கையில்லாதவர்கள் அகத்தால் மட்டுமின்றிப் புறத்தாலும் நலம்கெட்டு வளம் குன்றிப் போவார்கள்.

மொழியால் நாம் தமிழர்கள். நாட்டால் நாம் இந்தியர்கள். நாமெல்லாம் இந்தியக் குடிமக்கள் என்று இதய பூர்வமாக உறுதிமொழி எடுத்துக்கொள்வோமாக! எந்த நிலையிலும் மொழியாலோ மதத்தாலோ சாதியாலோ எத்தகைய வேற்றுமையும் எழ நாம் இடமளிக்கமாட்டோம்.

## அரசியல்

நிலத்தையும் வீட்டையும் பிரிக்கமுடியாதது போல, அரசையும் தனிமனித வாழ்க்கையையும் பிரிக்கமுடியாது. தனிமனிதனின் நல்வாழ்வுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும்; அரசின் சிக்கல்களுக்குப் பரிகாரம் காண்ப தற்குத் தனிமனிதன் பொறுப்பேற்க வேண்டும்.

சோஷலிச சமுதாய அமைப்பிற்குரிய ஊற்றுக் கண் கள் ஒற்றுமை—உழைப்பு—அளவுக்கு மீறிய தன்னல மின்மை ஆகியன.

மனிதனுடைய திறமைகள் எவ்வாறிருப்பினும் அவ னுடைய செல்வத்திற்கும் அனுபவத்திற்கும் கட்டுப்பாடு

உண்டாக்கி இயந்திரம் போல மனிதனை வாழச் செய்வது– தனிமனிதனைப் பற்றிக் கவலைப்படாது சமுதாயத்தை முதன்மைப்படுத்துவது–இதுதான் கம்யூனிசம் !

முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இடைப் பட்டதாக மனிதனுடைய திறமைக்கு வாய்ப்பளித்து எந்த ஒரு மனிதனுடைய திறமையையும் வாய்ப்பையும் வேறு எந்த மனிதனின் திறமையும் வாய்ப்பும் அபகரிக்காமல் இருக்கும்படி தடுத்து எல்லாருக்கும் எல்லா வாய்ப்பும் கிடைக்கும்படி செய்வது–இதுதான் சோஷலிசம், நமது தாயகத்தின் கொள்கை !

சுதந்திரம் வாங்குவது பெரிதல்ல. சுதந்திர சமுதா யத்தை உருவாக்குவதுதான் பெரிது. மக்களிடத்தே உணர்ச்சி பூர்வமான மாறுதல் ஏற்படாதவரை புதிய சமு தாயத்தை அமைக்க முடியாது.

தன்னுடைய கடமைகளை ஒழுங்காகவும் முறையாக வும் செயயும் சக்தியுடையவனே தலைசிறந்த குடிமகன்.

பஞ்சாயத்து என்பது நீதியின் பெயர்–நம்பிக்கையின் பெயர்–தூய்மையின் சின்னம். பஞ்சாயத்து உறுப்பினர் கள் இதனை நன்ருக மனத்தில் பதிய வைத்துக்கொண்டு.

மக்களின் உழைப்பாற்றலைப் பெருக்கவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபடவேண்டும்.

❋

ஒருவன் ஏகபோகமாக வாழ்கின்றான் என்றால் அவன் ஒரு நூறு பேரையாவது சுரண்டித்தான் அவர்களையெல்லாம் அழ வைத்திருக்கிறான் என்று பொருள். எனவே, அந்த நூறு பேரின் அழுகை தீரவேண்டும் என்றால் அந்த ஒருவனுடைய ஏகபோக உரிமை ஒழிக்கப்பட வேண்டும்.

❋

சாதியால் இனத்தால் பேசும் மொழியால் இன்ன பிற வற்றால் மக்களைப் பிரிக்காமல் அவர்களின் உழைப்பை— உழைப்பாற்றலை வளர்க்க ஏற்பட்ட ஒரு நல்ல அமைப்பே பஞ்சாயத்து. மக்களைச் சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்குப் படிப்பிப்பது, பஞ்சாயத்தின் விழுமிய கடமைகளில் ஒன்று.

❋

இறைவனின் கருணை நிறைந்த சந்நிதானத்தில் கொடுமை என்பதே இருக்கக்கூடாது. இதற்குப் பஞ்சா யத்து ஆட்சி தேவை. திருக்கோயில்களில் அருச்சகர் களுக்குத் தேவையான மனத்தூய்மையும், விருப்புவெறுப் பற்ற தன்மையும்,மனப்பக்குவமும் பொறுப்பும் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்குத் தேவை.

❋

இந்த நாடு அன்னியர்க்கு அடிமைப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் பெண்ணடிமைதான். ஈன்று புரந் தரும் தாய் அடிமையாக இருந்தால் அவள் ஈன்று தருகிற குழந்தையும் அடிமையாகத்தானே இருக்கும்!

## வாழ்வியல்

முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவித் தூய்மைப் படுத்தினுல் புற அழகு ஏற்படும். அவா, வெகுளி, இன்னுச் சொல் ஆகியவற்றை நீக்கி அகத்தைத் தூய்மைப் படுத்தினுல் அக அழகும் ஏற்படும் ; புற அழகும் ஏற்படும்.

குழந்தைகளை நன்ருகப் பழக்க வேண்டும் - கண்டித்து வளர்க்க வேண்டும். ஆனுலும், கண்கலங் காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் இலட்சியமே ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதுதான்.

பிறரை வாழ்வித்து வாழவும், பிறரை மகிழ்வித்து மகிழவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆர்வம் தோன்றுவது இயற்கை. அதைச் செயற்படுத்தும் திறமை முயற்சியால் பெறக்கூடியதாகும் !

பிறநாட்டுக் கலைகளையும் இலக்கியங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளாமல் நம்முடைய கலைகளையும் இலக்கியங்களையும் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் வலியுறுத்துவதும் ஆதிக்கத்தின் பாற்பட்டதாகும். அவ்வாறின்றிக் கொண்டும் கொடுத்தும் வாழ்வதுதான் அன்பின் வழிப்பட்டது. இவ்வாறு கொண்டும் கொடுத்தும் வாழும் வாழ்க்கை இன்றையத் தமிழ்ச் சமுதாயத்திற்கு மிக மிக இன்றியமையாதது.

இளம் பிள்ளைகளின் உள்ளம் மிக மென்மையானது — நுண்ணியது. அவர்கள் விஷயத்தில் பின்னலை அவிழ்ப்பது போன்ற பொறுமையைக் கையாளவேண்டும்.

பொன் நிரந்தரமான பெருமதிப்புடையது ! ஒருவருக்கு நாம் பொன்னுடை போர்த்துகிறோம் என்றால் அவருடைய தொண்டினை - அவருடைய அறிவினை — நாம் பொன்போல மதித்துப் போற்றுகின்றோம் என்பது பொருள். இந்த அடிப்படையிலேயே பொன்னுடை போர்த்தும் பழக்கம் தோன்றியிருக்க வேண்டும்.

திருக்குறள் தோன்றிய நாடு நமது தமிழ்நாடு என்ற பெருமைமட்டும் நமக்குப் போதாது. 'குறள் நெறி' நடை முறையில் உள்ள நாடு என்ற பெருமையை நாம் உண்டாக்கவேண்டும்.

அடக்கம் வேறு - அச்சம் வேறு. அடக்கம் உடையவனிடத்தில் ஒன்றை அறிந்துகொள்ளும் ஆர்வம் - துடிப்பு இருக்கும்; பண்பிருக்கும் - அச்சமுடையவனிடமோ அவற்றில் எந்த நல்லதையுமே காணமுடியாது. அடிமையுணர்ச்சிதான் மேலோங்கி நிற்கும்.

மனத்தில் தன்னுடைய பற்றுக்கோடுகளைப் பெரிதாக்கிக்கொள்ளாமல் தன்னலத்தைத் துறப்பதுதான் துறவு. ஒன்றை இழந்தபோது வருந்தாமலும், ஒன்றைப் பெற்றபோது மகிழாமலும் இருக்கின்ற மனப் பண்புடையராக இருத்தல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாகத் தொண்டுசெய்வதையே இலட்சியமாகக் கொள்ளவேண்டும். பொதுவாக, 'இது இல்லையானல் என்னல் வாழமுடியாது' என்கிற மனோபாவத்தை மாற்றிக் கொண்டாலே பாதித் துறவு வந்துவிடும்.

பரம்பரைச் செல்வ உரிமையின் பேராலும், சோம்பேறித்தனத்தின் காரணமாகவும் தேங்கிக் கிடக்கின்ற உழைப்பாற்றலைக் கிளறிவிட்டுப் பயன்பெறச் செய்ய வேண்டும்.

பிறரைக் கண்டு அஞ்சி நடுங்குபவன் கோழைத்தன மானவன் ; பிறர் கண்டு அஞ்சி நடுங்கும்படியாக நடந்து கொள்ளுபவன் மிருகத்தனமானவன்.

❁

உறவுக் குடும்பங்களில் பெண் எடுப்பதும் ஒருவரை யொருவர் நன்ருகப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்பதற்காகத்தான். ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழுகிற இல்வாழ்க்கையே சிறந்தது.

❁

நம் உரிமையை நாம் காப்பாற்றிக்கொள்வது மிக இன்றியமையாதது ; அதே நேரத்தில் மற்றவர்கள் அவர் களுடைய உரிமையைக் காப்பாற்றிக்கொள்ளவும் நாம் உதவியாக இருப்பது அவசியம்.

❁

மற்றவர்களின் வாழ்க்கையுரிமையை - பிறப் புரிமையை மதித்து நடக்காதவன் மனிதனல்ல - மனித உருவில் விலங்கு.

❁

நாள்காட்டியில் ஒரு தாள் கிழிக்கிருேமென்ருல் அதனை அறிவோடும் சிந்தனையோடும் கிழிக்க வேண்டும் நமது வாழ்நாளில் ஒருநாள் போய்விட்டது - இனி அந்த நாள் திரும்பி வராது என்ற சிந்தனை உணர்வுடன் கிழித் தால் காலம் போற்றும். பண்பும் - கடமையுணர்வும் தோன்றும்.

சுயநலத்தை விட்டுவிட வேண்டும் என்று சொல்லு கிறார்கள். சுயநலம் இருந்தாலும் பரவாயில்லை என்று நான் சொல்லுவேன். சுயநலத்திற்காகப் பொதுநலத் திற்குக் கெடுதல் பண்ணக் கூடாது என்பதுதான் என் னுடைய கருத்து. நம்முடைய மரத்திற்கு உரமிட்டுப் பாது காப்பது தவறில்லை. ஆனால், புறம்போக்கு மரத்தை வெட்டியெறியக்கூடாது. சுயநலத்திற்காகப் பொது நலத்தைப் பலி கொடுக்காத பண்பு வளர்ந்த பிறகு வேண்டுமானால் சுயநலத்தை விட்டுவிடுங்கள் என்று சொல்லலாம்.

❋

நல்லற நூல்களைப் படித்து அவற்றின் கருத்துக்களை வாழ்க்கையோடு இணைத்து வாழ்பவர்களே அறிவுடைய வர்கள்.

❋

இன்று மணமுடிக்கும்போது மணமகன் அல்லது மணமகளுடைய செல்வம் - உடற்கட்டு - படிப்பு இவற் றையே நோக்குகின்றனர். எதிர்காலத்தில் நல்வாழ்வுச் சமுதாயத்தை - இலட்சிய சமுதாயத்தை அமைக்க இவை மட்டும் இருந்தால் போதுமா ? இந்த நாட்டுச் சமுதாயம் எதிர்காலத்தில் சிறப்புடன் விளங்கப் பணமிருக்கிறதா ? உடற்கட்டிருக்கிறதா ? படிப்பிருக்கிறதா என்பதை மட்டும் பார்க்காமல், இவைகளோடு அவர்களது வாழ்வில் நல்ல இலட்சிய நோக்கும் இருக்கிறதா, ஒத்த இலட்சியமாகவும் அமைந்திருக்கிறதா என்று பார்ப்பது அவசியம்.

எலும்பு முறிந்துவிட்டால்கூடச் சில எண்ணெய்களும், பச்சிலைகளும் வேறு சில மருந்துகளும் போட்டு மீண்டும் ஒட்டவைக்க முற்படும் மனிதர்கள், எண்ணத்தில் வேற்றுமை ஏற்பட்டால் கலந்து பேச முற்படுவதில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது.

உழைப்பின்றிச் செல்வம் வராது. செல்வச் செழிப்பின் ஊற்றுக் கண் மகிழ்வோடும் கடமையுணர்வோடும் திட்டமிட்ட வகையில் உழைப்பதுதான்!

மனித வாழ்க்கைதான் வரலாற்றின் கருப்பொருள்.

சர்க்கரைக்கு இனிக்கும் சக்தி இருந்தால்தான் அது சோற்றுக்கும் பிற உணவுப் பொருள்களுக்கும் இனிப்பைக் கொடுக்க முடியும். அதுபோல தாய்தந்தையர்கள் நல்லவர்களாக - ஒழுக்கமுடையவர்களாக - பண்பாடுடையவர்களாக இருந்தால்தான் அவர்கள் வழித்தோன்றும் குழந்தைகளிடத்தில் அந்தப் பண்புகளைத் தோற்றுவிக்க முடியும்.

உலகத்தோடு உறவாடி வாழ்ந்து காப்பாற்றிக்கொள்வதில்தான் பெருமையுண்டு. தனித்திருந்து பிரிந்திருந்து வாழ்ந்து தனித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்வதில் பெருமையில்லை.

நம் இதயத்தை இறைவனுக்காக்கி, அறிவு ஆற்றல் அத்துணையையும் மனிதகுல நல்வாழ்வுக்காக்க வேண்டும்.

குடும்ப வாழ்க்கை நடத்துகிற தலைமகனும் தலைமகளும் அன்பும் அறிவும் பண்பும் உடையவர்களாக இருந்தால் குடும்பத்திலேயே மகிழ்ச்சி பொங்கும்! அவர்கள் மகிழ்ச்சியைத் தேடி வேறெங்கும் போகமாட்டார்கள்! குடும்பமே மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும் இன்பச் சோலையாக இருக்கும்.

மேலும் மேலும் பலருடன் நட்புக்கொள்ள வேண்டும் என்று விரும்புவதைக் காட்டிலும் பழைய நண்பர்களைத் தொடர்ந்து போற்றி வாழ்வது மிகவும் பெருமையுடையது.

வறுமை மிகவும் கொடியதுதான்; ஆனால் வறுமைக்கு மருந்து பணம் என்று பலர் கருதுகிறார்கள். உழைப்பும் உழைப்புக்கு அடிப்படையான முயற்சியுமே வறுமைக்கு மருந்து!

நமக்கு 'ஆமாம்' போடுகின்றவர்களையே பார்த்து நாம் நண்பர்களாகக் கொள்ளக்கூடாது. நம்மிடம் தவறு காணும்போது நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு அன்பினால் தூண்டப்பெற்று நம்மைத் தடுத்து நிறுத்தி, 'நீங்கள் செய்வது தவறு; உங்கள்

போக்கு நேர்மையானதல்ல' என்று இடித்துக் கூறித் திருத்த முற்படுகிறவர்களையே நாம் நண்பர்களாகப் பெறவேண்டும்.

தன்னுடைய உழைப்பாற்றலுக்கு ஏற்றவாறு உழைத்தலும் உற்பத்தியைப் பெருக்குதலும் பலருக்குத் தேவைப் படக்கூடிய ஒன்றை அவசியமின்றிச் சேமித்து வைக்காமல் இருப்பதும் சுதந்திரக் குடிமகனுக்கு இன்றியமையாக் கடமைகள் ஆகும்.

முதலில் இந்த நாட்டை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டு மக்கள் அனைவரையும் அந்தரங்க சுத்தியுடன் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இப் பண்புகள் வளர்ந்தாலேயே ஜனநாயகத்தைக் காப்பாற்றும் சக்தியைப் பெறுவோம்.

ஒருவன் உங்களைப் பார்த்து அஞ்சுகிறான் என்றால் அது பெருமைக் குரியது அல்ல. பயப்படுகிறவன் உங்களைக் கொடியன செய்யும் விலங்கு என்றோ அல்லது பேய் பிசாசு என்றோ எண்ணிக்கொண்டிருக்கிறான் என்பதே அதன் பொருள். அச்சத்திலிருந்து மனிதனை விடு விக்க வேண்டும். அஞ்சுதலும் இழிவு - பிறர் அஞ்சத்தக்க வழியில் வாழ்தலும் இழிவு. அச்சமற்ற வாழ்க்கையில்தான் உண்மையான சொர்க்கத்தைக் காணமுடியும்.

மக்கள் குறையுடையவர்கள். அந்தக் குறைகளை நீக்கி நிறைவைப் பெறத்தான் அவர்கள் வாழ்க்கை என்ற பல்கலைக் கழகத்திற்கு வந்திருக்கிறார்கள்.

❁

மனிதன் புற உலகில் வளர்ந்திருக்கிற அளவிற்கு அக உலகில் வளர்ச்சியடையவில்லை. உலகம் அவனது காலடியில் வீழ்ந்து கிடக்கிறது. புயலை - வெள்ளத்தை - நோயை அடக்கியாளக் கற்றுக்கொண்டிருக்கிற மனிதன் பக்கத்து வீட்டுக்காரனோடு கூடிக் குலாவி அன்போடும் பண்போடும் வாழக் கற்றுக்கொள்ளவில்லையே!

❁

நம்முடைய உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தி அன்பின் வழியாக நம்முடைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் உரிய பணிகளைச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவதே சிறந்த குடிமைப் பண்புடையவரின் கடமை.

❁

வேற்றுமைகளை உள்ளடக்கி விழுமிய ஒருமைப்பாட்டை உருவாக்கினால்தான் மனித சமுதாயம் ஒரு குடும்பமாக வாழமுடியும்.

❁

நமது போக்குவரத்துக்காக அமைக்கப்பெற்ற சாலைகளில் உள்ள மேடுபள்ளங்களே கேடுகள் விளைவிக்கின்றன என்றால், மனிதனின் நல்வாழ்வுக்காக உள்ள சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் உயிரியில் வாழ்க்கைக்கும்-அவ்வழி அமையும் புற வாழ்க்கைக்கும்

எத்துணைக் கேடு பயக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

❁

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் சமுதாயத்தில் உள்ள மிகச் சாதாரண மக்களுக்கும் வாழ்வு தர முடியும்.

❁

இந்த உலகில் முக்கியமாகப் பூசிக்கத் தகுந்தவை இரண்டு. ஒன்று கடவுள்-இன்னொன்று ஆன்மா. கடவுள் இயல்பிலேயே பூசிக்கும் தகுதியுடையது. கடவுளை அடைவதன் காரணமாகவே ஆன்மா பரிபூரணத்துவம் எய்துகிறது. ஆன்மா பரிபூரணம் எய்துதற்குரிய சாதனங்களே பிரார்த்தனை வழிபாடு அனைத்தும்! ஆன்மா கடவுளின் கருணைக்குரியதன் காரணமாக பூசனைக்குரியதாகிறது.

❁

இறைவனின் சந்நிதி நியாயத்தின் சந்நிதி. இறைவனின் கொள்கை நீதி. நியாயமும் நீதியும் எங்கு எல்லாருக்கும் கிடைக்கின்றனவோ அந்த நாடே அமரர் நாடு. அங்கு வாழும் மக்கள் அமரர்களாலும் பின்பற்றக்கூடிய பெருமையுடையவர்கள்.

❁

பல தனி மனிதர்களின் கூட்டுத்தான் சமுதாயம். சிலர் சமுதாயத்தோடு - கூட்டத்தோடு சேர்ந்திருக்கும் போது நல்லவர்களாக - நாணயமானவர்களாக நடந்து

கொள்கிறார்கள். தனிமனிதர்களாக இருக்கும்போது விலங்குகளைவிடக் கொடியவர்களாக இருக்கிறார்கள்!

நாம் சில ஆண்டுகள் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுக் கூட்டுறவுப் பண்பிலே திளைத்தால் கோபதாப உணர்வுகள்கூடக் குறைந்து மறைந்துவிடும். கூட்டுறவு இயக்கம் நம்மைப் பண்படுத்துகிறது - பக்குவப்படுத்து கிறது.

மனித உலகின் துன்பத்தை-துயரத்தை-ஏழ்மையை வறுமையைப் பிணியைப் போக்கி மற்றவர்களுக்குப் பயன் படும் வாழ்க்கை வாழ்வதுதான் நமக்குப் பெருமை-நாம் வணங்கும் கடவுளுக்கும் பெருமை.

கூட்டுறவு வாழ்க்கையை மேற்கொள்வதன் மூலம் தனி மனிதனும் ஒழுக்கநெறிகளில் தூண்டி வளர்க்கப் பெற்றுச் செழுமையுறுகிறான். சமுதாயமும் சிறப்பாக அமைகிறது. கூட்டுறவு வாழ்க்கையை மேற்கொண்ட சமுதாயத்தில் வளம்-வறுமை இவற்றிடையேயுள்ள வேறு பாடு குறையும். காலப்போக்கில் மறைந்துபோகும். ஆதிக்க உணர்வுகள் குன்றி சமுதாய ஒப்புரவுப் பண்பாடு மலரும்-பகை மறையும்-உறவு வளரும் - அன்பு செழிக்கும்-இன்ப மணம் எங்கும் கமழும். இம் மண்ணுலகே விண்ணுலகாக மாறும்.

தவம் செய்தற்கு வேண்டிய அளவு முயற்சியும் பண்பும் கூட்டுறவு வாழ்க்கையை ஏற்கவும் ஏற்படுத்தவும் வேண்டும்.

❋

தொண்டால் மனிதன் உயருகிறுன்-தொண்டால் மனிதனின் தன்மை வளர்கிறது. தொண்டால் மனிதன் கடவுளேயும் ஏவல் கொள்ளலாம்.

❋

ஒருமைப்பாடே உலகின் நியதி. அ∴து அன்பை வளர்க்கும். அருளேப் பெருக்கும். இன்பத்தை விளேவிக்கும். நிரந்தரமான அமைதியை உண்டாக்கும்.

## அறவுரை

சமய சமூகநல நிறுவனங்கள் தங்களுடைய சிறந்த இலட்சியங்களுள் ஒன்றாகத் தீண்டாமை விலக்கை வைத்துப் பணியாற்றவேண்டும். தீண்டாமை விலக்கில் தொடங்கி, சாதியற்ற சமுதாய அமைப்பில் நம்முடைய இலட்சியம் நிறைவேற வேண்டும்.

சர்க்கஸ் ஆடப் பலருக்குத் தெரியாது-அதற்கான தைரியமும் இருக்காது. ஆனாலும், சர்க்கஸ் ஆடுகிறவர்களைப் பார்த்து மகிழும் மனம்கூட இல்லாமல் மயங்குகிறவர்களைப் பற்றி நாம் என்ன நினைப்பது? அதுபோல பலருக்கு இசைபட வாழ்தலுக்குரிய முயற்சியிருக்காது. ஆனாலும் பிறருடைய புகழில் அழுக்காறு கொள்ளுகிறார்கள்.

நமது ஆற்றலும் வசதியும் அவ்வளவுதான் என்று இரண்டுக்கும் ஓர் எல்லேக்கோடு கட்டிவிட்டால் அதன் பிறகு வாழ்க்கையில் முன்னேறுவதென்பது முடியாத ஒன்று. வாழ்க்கையில் முடியாததென்பதொன்றில்லே- எதுவுமே முயன்ருல் முடியக்கூடியதுதான் என்ற நம்பிக்கை முன்னேற்றத்திற்கு வித்து.

அடக்கத்தின் பேரால் அச்சத்தை வளர்ப்பது பூக்கிற பூவைக் கசக்கி எறிவது போன்றது.

மனிதன் மனிதத்தன்மையை விட்டு விலகி வெறித் தன்மைக்குப் போகும்போது அதை எதிர்க்காமல் எப்படி அனுமதித்துக்கொண்டிருக்க முடியும்?

நான் இலக்கிய உலகில் திருவள்ளுவரையும், சமய உலகில் மாணிக்கவாசகரையும், அரசியல் உலகில் நேரு ஜியையும் நம்புகிறேன்-பாராட்டுகிறேன்-பினபற்றுகிறேன்.

விலங்குக்கும் மனிதனுக்கும் வேறுபாடு இருக்க வேண்டாமா? தின்னுவதில் யானே மனிதனே வென்று விட்டது. ஊர் சுற்றுவதில் நாய் மனிதனே வென்றுவிட்டது. இனப்பெருக்கம் செய்வதில் பன்றி மனிதனே வென்று விட்டது. எனவே இவற்ருலெல்லாம் மனிதன் உயர்ந்தவன் அல்லன். சிந்தனேயால்தான் மனிதன் சிறந்தவனுக வாழமுடியும்.

சாதீய முறையை உருவாக்கிய அந்த முதலாளித்துவ சுரண்டல்காரர்கள் தங்கள் கொள்கையை உறுதிப்படுத்தச் சமயத்தை-மதத்தைத் துணைக்கழைத்துக் கொண்டார்கள். மன்னன் ஆணை என்றால் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறவர் களும் மகேசுவரன் கட்டளை என்றால் மறுக்காமல் ஒத்துக் கொள்வார்கள். இதை வைத்தே முதலாளித்துவவாதிகள் சமயத்திற்கும் சாதீய முறைக்கும் முடிச்சுப்போட்டார்கள். அவ்வளவுதான். எனவே, சாதீய முறை நமது சமயத்திற்கு முற்றிலும் முரண்பட்டது.

சாதீயமுறை முதலாளித்துவமுறை. முதலாளித்துவ வாதிகள் தங்கள் சுரண்டலுக்கும் சுகபோகங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடாமல் தடுத்துக் காத்துக்கொள்ளவே சாதீய முறைகளை உருவாக்கி அதற்கு ஆதரவும் கொடுத்து வருகின்றார்கள்.

உலகம் முழுவதிலும் வாழும் மனிதகுலம் அனைத்தும் ஒரு குலம்-ஓரினம்-ஒரு நிறை. இதுவே அறநெறியின் அடிப்படை, அருள்நெறியின் இலட்சியம். நியாயத்தின் வழி.

நிலத்திற்கு உரமிட்டால் நிலவளம் பெருகும். அது போல, மனிதனுக்குக் கருத்துணவு கொடுத்தால் அவனது உளவளம் பெருகும்.

உழவனும் இளைத்து உழவுமாடும் இளைத்துப்போனால் அந்த நாடு உருப்படுமா ?

ஆண்கள் பெண்களின் கற்பைக் காப்பாற்ற வேண்டும் ; பெண்கள் ஆண்களின் புகழைக் காப்பாற்ற வேண்டும்.

வீணை வாசிப்பதைவிட வாழ்வாங்கு வாழ்வது மிகச் சிறந்த கலை. அந்தக் கலையில் மிகச் சிலர்தாம் வெற்றி பெறுகின்றனர்.

இந்த உலகில் நீதியும் சமதர்மமும் நிலைத்து அன்பியல் செழித்து வளர்வதற்கான கருத்தை உருவாக்கும் கல்வியையே நாம் நமது குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பல்வேறு பிறப்புக்களில் ஏற்பட்ட இன்பதுன்பங்களை மறப்பதற்கான ஒரு நல்ல சாதனம்தான் மரணம்.

அறிவிலே தெளிவு தோன்றும்போது மனிதனுக்குக் குறிக்கோளும் தோன்றிவிடுகிறது.

நமது ஆற்றலும் வசதியும் அவ்வளவுதான் என்று இரண்டுக்கும் ஓர் எல்லைக்கோடு கட்டிவிட்டால் அதன் பிறகு வாழ்க்கையில் முன்னேறுவது அரிது. வாழ்க்கையில் முடியாததொன்றில்லை. முயன்றால் எதுவும் முடியக் கூடியதுதான் என்ற நம்பிக்கைதான் முன்னேற்றத்திற்கு வித்து.

ஒரு துறவி தவறு செய்தால் அது சமுதாயத்தை—நாட்டின் எதிர்காலத்தை அவ்வளவாகப் பாதித்துவிடாது. காரணம் துறவிக்கு வாரிசு இல்லை. இல்லறத்தான் தவறு செய்தால் அது வழிவழியாகத் தொடர்ந்து வரும். நாட்டையும் சமுதாயத்தையும் பெரிதும் பாதிக்கும்!

கோயிலுக்கும் குடிசைக்கும் இடையேயுள்ள தூரம் குறையவேண்டும்.

நாம் உண்ணுகின்ற உணவால்-பாலால்-பழங்களால் இன்னபிற சுவையுணவுகளால் இரத்தம் ஊறுகிறது, ஆனாலும், அந்த இரத்தத்திற்கு வடிவமும் குணமும் பண்பும் கொடுப்பது நமது சிந்தனைதான். ஆதலின் நாம் நமது சிந்தனையூற்றைச் செழுமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மனித குலம் குறைகளை நீக்கி நிறைவை நோக்கிப் பயணம் செய்வதற்குக் கிடைத்த அரும் பிறவி மானிடப் பிறவி. அத்தகு மானிடப்பிறவியின் மாண்பையும் பயனையும் நமது சிந்தனைகளால் – செயல்களால் கெடுத்துவிடக் கூடாது.

## தத்துவம்

பலனில் பற்றின்றிப் பணி செய்யவேண்டும் என்பார்கள். என்னைக் கேட்டால் பலனில் பற்றின்றிப் பணி செய்யக் கூடாது என்றே சொல்லுவேன். பலனில் நிச்சயம் பற்று வேண்டும். ஆனால், எதிர்பார்க்கும் பலன் தன்னலச் சார்புடையதாக மட்டும் இருத்தல் கூடாது.

விரிந்த– பரந்த மனப்பான்மையுடன் புதிய கருத்துக்களையும் புதிய சிந்தனைகளையும் வரவேற்கும் சக்தியைப் பழமையின் மீது நமக்கிருக்கின்ற அளவற்ற பாசம் காரணமாக நாம் இழந்துவிடக்கூடாது. கூறப்பெறுகிற கருத்துக்கள், நல்லவைதாமா ஏற்புடைத்தாமா என்பதை நல்ல கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து நல்லதாக இருக்குமானால் ஏற்கத் தயங்கக்கூடாது.

தீண்டாமை ஒரு சமூகக் கொடுமை. நம்முடைய சமுதாயத்தையும் சமயத்தையும் பிடித்துக்கொண்டிருக்கிற ஒரு பெரு நோய் அது. தீண்டாமை விலக்கின் மையம் கருத்துப் புரட்சி – மனமாற்றம் ஆகியனவே. இந்தக் கருத்துப் புரட்சியும், மனமாற்றமும் உயர்சாதி மக்கள் எனப்படுவோரிடையே ஏற்படவேண்டும்.

பிறருக்குத் துன்பமில்லாத வாழ்க்கையை அன்பாலே தான் பெறமுடியும். நம் உடம்போடு உயிர் இணைந்திருப் பதே அன்பு செய்வதற்காகத்தான்.

காரை முறையாக இயக்கத் தெரிந்தவன் காரோட்டி ; மனத்தை முறையாக இயக்கத் தெரிந்தவனே மனிதன்.

சமுதாயத்தில் இன்பம் நிலைபெற வேண்டுமானால் நமது மனத்தில் அன்பு விதை பாவிக்கொள்வதோடு, நம்மைச் சூழ்ந்து வாழுகின்ற மற்றவர்கள் மனத்திலும் அன்புவிதையைப் பாவவேண்டும்.

மனிதப் படைப்பின் நோக்கமே ஆர்வம் நிறைந்த உழைப்பினால் இந்த மாநிலத்தைப் பயன்படுத்திப் பயனுறு வதுதான். உழைக்காமல் இருப்பது பாவம் என்ற தத்துவம்

மக்களிடத்தில் வளர்ந்து கால் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

❋

பசு, நாம் கொடுக்கும் தீனியைத் தின்று புல்லே மேய்ந்து வாழ்கின்றது. தன்னுடைய வாழ்வுக்குரிய அளவிற்கு எடுத்துக்கொண்ட உணவுப் பொருளில் ஒரு பகுதியை இரத்தமாக்கிக்கொள்ளுகிறது. எஞ்சியதைப் பாலாக்கிச் சமுதாயத்திற்குத் திருப்பிக்கொடுத்துவிடு கிறது. மரங்களும் தாம் உயிர் வாழ்தற்குத் தேவை யானது போக எஞ்சியதைக் காயாக-கனியாகச் சமுதாயத் திற்குத் திருப்பிக் கொடுத்துவிடுகின்றன. மனிதனிடத் திலும் இந்த உயர்ந்த பழக்கம் வரவேண்டும். பசு பால் கொடுக்கும் - தென்னை காய் கொடுக்கும் என்பது போல மனிதன் வாழ்வு கொடுப்பான் என்கிற வழக்கு நடை முறைக்கு வரவேண்டும்.

❋

உலகம் ஒரு சந்தைக்கூடம்; அழுக்காறு, அவா, வெகுளி முதலிய சில பயன்படாத சரக்குகளை ஏற்றிக் கொண்டு இந்த உலகச் சந்தைக்கு வணிகர்களாக வந் துள்ளார்கள் மனிதர்கள். அந்தக் கெட்ட சரக்குகளை இங்கேயே இறக்கிவிட்டு அன்பு, ஒப்புரவு, ஈகை, கண் ணோட்டம் முதலிய நல்ல சரக்குகளைத் திரும்ப ஏற்றிக் கொண்டு மீண்டும் செல்லவேண்டும். அப்போதுதான் அவர்கள் கெட்டிக்கார வணிகர்களாக-சிறந்த வணிகர் களாக மதிக்கப் பெறுவார்கள்.

மனிதன் இயல்பிலேயே உள்ள பொருள் ; அவன் படைக்கப் பெற்றவனுமல்லன் - அழிக்கப்படக்கூடியவனு மல்லன். அவன் ஓர் அறிவுப் பொருள். அவாக்களும் ஆர்வமும் நிறைந்தவன். ஆர்வத்தின் காரணமாகச் செயல் செய்யக் கூடியவன். பேரறிவு பெறத் தகுதியுடையவன்.

தன்னலத்தை முற்றிலும் விட்டுவிடுதல் என்பது அவ்வளவு எளிதானதல்ல. தன்னலத்திற்கு ஓர் எல்லே வகுத்துக்கொண்டால் போதும். தன்னலம் பிறர் நலத் திற்குக் கேடு செய்யாததாக அமையும்படி எல்லே வகுத்துக் கொள்ள வேண்டும். இதுவே அறநெறி.

மானிடப் பிறவி மதித்தற்குரிய பிறவி. இந்த உடம் போடு உயிர் கலந்துள்ளபோதே எண்ண-சிந்திக்க-பேச-செயல்பட முடியும். உடம்போடு தொடர்புகொண்ட உயிர்-இயக்கத்தில் மூச்சுக்காற்று. மூச்சு நின்றுவிட்டால் உயிர் உடல் வழி இயங்கிய இயக்கம் நின்றுவிடுகிறது. அதன் பின் எண்ண-சிந்திக்க-பேச—செயல்பட முடியாது. எனவே இந்த உடம்பிலே இடமாகக்கொண்டு உயிர் இயங்கும் போதே, பாவத்தை-தீமையைத் தூற்றிப் புண்ணியத்தை-நன்மையைச் சேர்த்துக்கொள் என்று நமக்கு அறிவுறுத்து வது போலவே ‘காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்’ என்ற பழமொழி எழுந்தது.

‘காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்’ என்பது நல்ல ஞானப் பழமொழி. ஆனல் இன்று மக்களிடையில் இந்தப் பழமொழி வழங்கும் நிலே வேறு.

மற்றவர்கள் ஏமாந்திருக்கும்போது-வாய்ப்பு கிடைத்த போது வாரிச் சுருட்டிக்கொள் என்ற இழிபொருளிலே அந்தப் பழமொழி வழங்கப்பெற்று வருகிறது.

இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் இயல்பாக உள்ளன. இன்பம் வரும்போது எல்லையற்ற மகிழ்ச்சி கொள்ளாமலும் துன்பம் சூழ்ந்தபோது துவண்டுவிடாமலும் இருக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

மார்க்சுக்கு லெனின், ஸ்டாலின் ஆகிய சீடர்கள் கிடைத்தார்கள். அவர்கள் மார்க்சீய தத்துவத்தை நடைமுறைப்படுத்த முயன்றார்கள். வெற்றியும் கண்டார்கள். நமது திருவள்ளுவருக்கும், அப்பரடிகளுக்கும் கிடைத்த சீடர்களோ அவர்களின் தத்துவங்களைப் பாராட்டினார்கள்-போற்றிப் புகழ்ந்தார்கள்-அவர்களைக் கும்பிட்டார்கள்-நடைமுறைப்படுத்த முயலவில்லை.

மனிதனுடைய வாழ்வு வளரவில்லை-வாழ்வில் வளம் பெருகவில்லை. வாழப் பிறந்தவர்களைப் பிச்சைக்காரர்களாக்கி மகிழ்வது மகேஸ்வரனுக்குப் பிடிக்காத ஒன்று. மனிதனை வாழவைப்பதுதான்—மனித சமுதாயம் உய்யத் தொண்டு செய்வதுதான் மனிதப் படைப்பின் நோக்கம்-குறிக்கோள்.

துன்பம் வரும்போது நாம் அதைப் பார்த்துச் சிரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். துன்பத்திற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நம்மை நாமே எண்ணிப் பார்த்துச் சிரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மை எண்ணிப் பார்த்து நாம் விமர்சனம் செய்து சிரிக்க மறந்துவிட்டால் நம்மைப் பார்த்து மற்றவர்கள் சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள். துன்பம் வரும் போது, அந்தத் துன்பத்திற்குக் காரணம் நமது அறியாமையும் முட்டாள்தனமும்தான் என்று உணர்ந்து சிரிக்க வேண்டும்.

❊

மனிதன் விடுகின்ற மூச்சுக் காற்று தண்மையாக இருந்தால் அன்பு வரும், ஆற்றல் பெருகும் என அறிவியல் கூறுகிறது. எனவே மூச்சுக் காற்று தண்மையாக இருக்குமானல், இந்த உலகையே சொர்க்கமாக்கலாம்.

❊

விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் இணைப் பூட்டும் ஒரு பொற்சங்கிலி அன்பு.

❊

நதிகளில் நீராடினுல் பாவம் தீரும்-புண்ணியம் சேரும் என்ற எண்ணத்தில் பாவிகள் பாவ மூட்டைகளைச் சுமந்து கொண்டு போய் நதிகளிலே நீராடுகின்ருர்கள் ! ஆனுல் அந்த நதிகளோ 'ஐயகோ ! இவ்வளவு பெரும் பாவ மூட்டைகளோடு இவர்கள் வந்து முழுகி நம்மைக் கறைப்

படுத்திவிட்டார்களே!' என்று வருந்தித்தான் விரைந் தோடிச் சென்று கடலில் மூழ்கிவிடுகின்றன போலும்!

எல்லாருடைய உடம்பிலும் இரத்தம் ஓடுகிறது. எனினும் இரத்தத்தின் தன்மை வெவ்வேருக இருக்கிறது.

இயேசுநாதரின் உடம்பிலும் இரத்தம் ஓடியது. அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் உடம்பிலும் இரத்தம் ஓடியது. இயேசுநாதரின் உடம்பில் ஓடிய இரத் தம் அன்பு இரத்தம். மற்றவர்கள் உடம்பில் ஓடிய இரத்தம் கொலைவழிச் சார்புடையது.

நபிகள் நாயகம் உடம்பிலும் இரத்தம் ஓடியது. அவரைத் துரத்தி யடித்துத் தொல்லை விளைவித்த அவர் பகைவர்களின் உடம்பிலும் இரத்தம் ஓடியது. நபிகள் நாயகம் உடம்பில் ஓடியது அன்பு இரத்தம். அவர் பகை வர்கள் உடம்பில் ஓடிய இரத்தம் பகைவழிச் சார்புடையது.

காந்தியடிகள் உடம்பிலும் இரத்தம் ஓடியது. அவரைச் சுட்டு வீழ்த்திய கோட்சேயின் உடம்பிலும் இரத்தம் ஓடியது. காந்தியடிகள் உடம்பில் ஓடியது சாந்தம் தழுவிய இரத்தம். கோட்சேயின் உடம்பில் ஓடிய இரத்தம் கொலைத்தன்மை தழுவியது.

ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள். உங்களுக்கு வேண்டியது யாருடைய உடம்பில் ஓடிய இரத்தம் ?

இயேசுநாதர் உடம்பில் ஓடிய இரத்தமா ? அவரைச் சிலுவையில் அறைந்த குண்டர்கள் உடம்பில் ஓடிய இரத்தமா ?

முகம்மது நபியின் உடம்பில் ஓடிய இரத்தமா? அவரைத் துரத்தியடித்த தீயவர்கள் உடம்பில் ஓடிய இரத்தமா ?

காந்தியடிகள் உடம்பில் ஓடிய இரத்தமா ? அவரைச் சுட்டு வீழ்த்திய கயவனின் உடம்பில் ஓடிய இரத்தமா ?

சான்றோர்கள் உடம்பில் ஓடிய இரத்தமே நம்மை வழி நடத்தும் ; வாழ்விக்கும் !

❋

மனிதனோடு பேச வாய் ; இறைவனோடு பேச இதயம்.

❋

உரிமை உயிர் போன்றது - தூய்மை மிக்கது - அதைப் பறிக்க முயல்வது அறியாமை - பாவம் - கொடுமை.

❋

உயிர் இயங்குவதற்கு இந்த உடலைக் கருவியாகக் கொண்டிருப்பதால் உயிருக்குள்ள சிறப்பு உடலுக்கும் உண்டு. ஆனாலும், உயிருக்குள்ள சிறப்பு நிரந்தரமானது - உடலுக்குள்ள சிறப்பு நிலையற்றது - மாறுந்தகையது.

❋

தத்துவத்தை - கொள்கையை மக்கள் மன்றத்தில் நடைமுறைப்படுத்தி அவர்களோடு நாமும் ஒன்றி யிருந்து திருத்தொண்டு செய்யவேண்டும்.

எண்ணத்திற்கு ஒரு வலிவு உண்டு. இதைத்தான் 'மனம்போல் வாழ்வு' என்பார்கள். முழுமனத்தோடு ஒன்றைநினைத்துவிட்டால் அது நடக்கும். முழுமனத்தோடு எண்ணிய எதுவும் நடக்கும்-எப்போதும் நடக்கும்.

❋

மனிதன் இயல்பிலேயே விலங்குமல்லன்-பேரறிவுடையவனுமல்லன். அவன் எல்லைக்குட்பட்ட அறிவினின்று பயின்று வாலறிவனின் திருத்தாள் சிந்தனையால் பேரறிவு வட்டத்திற்குள் செல்லவேண்டியவன்.

❋

சமயம் நிரந்தரமான உயிரோட்டமுள்ள ஒரு தத்துவம். அதற்கு எக்காலத்தும் அழிவு ஏற்பட்டதில்லை. காலநிலைமைகளின் விளைவாகச் சிலபொழுது அது மறைந்தது போலத் தோற்றமளிக்கக்கூடும். ஆனாலும் அழிவதில்லை. தத்துவத்துக்கு ஏது அழிவு? ஆனாலும் தத்துவம் உண்மையாதலும் - பயன்படுதலும் தத்துவத்தை நடைமுறைப்படுத்துவதின் மூலமேயாம்.

❋

இறைவன் தத்துவங்களைக் கடந்தவன்; உயிர்கள் தத்துவங்களுக்கு உட்பட்ட நிலையிலிருந்து கடந்த நிலைக்கு வளரும் முயற்சியே சமய வாழ்க்கை.

❋

மனித வாழ்வின் ஊற்றுக்கண் சித்தம். நமது எண்ணம், சிந்தனை, செயற்பாடு அனைத்தும் சித்தத்திலிருந்தே பிறக்கின்றன. சித்தம் அழுகியதாக இருக்கு

மாஞல் நல்ல சிந்தனை தோன்ருது. நல்ல சிந்தனை இல்லையென்ருல் நல்ல எண்ணங்கள் தோன்றமாட்டா. நல்ல எண்ணங்கள் இல்லையாஞல் நல்ல செயற்பாடு தோன்ருது. இரத்தம் கெட்டால் நோய் ஏற்படும். சித்தம் கெட்டால் சீரழிவு தோன்றும்.

கடவுளை நம்பமாட்டேன் என்று சொல்லுவது பைத்தியக்காரத்தனம் ; நம்ப மறுப்பவனிடம் கடவுளைக் காட்ட முயல்வது அதைவிடப் பைத்தியக்காரத்தனம்.

நாம் பிறரிடமிருந்து எதை எதிர்பார்க்கிருேமோ, அதையே நாம் மற்றவர்களுக்கு வழங்குகின்ற பண்பாடு உயர்ந்த சமுதாய ஒழுக்கநெறி.

மனிதர்களின் உள்ளுணர்வுக்கும் புறச் சூழலுக்கும் பெரும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்போராட்டத்தில் வெற்றிபெற்றவர்கள் மேதைகளாக - ஞானிகளாக ஆகிருர்கள்.

வெறுப்பிலிருந்து விளைவது வேற்றுமை. அது காழ்ப்பையூட்டும், பகையை வளர்க்கும், போரைத் தோற்றுவிக்கும், தீராத தொல்லைகளையும் தரும்.

## பல்சுவை

இறைவன் நமக்குத் தந்திருக்கிற அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தாமல் பாழடிப்பது கறந்த பாலைக் கற்பாறையிலே கொட்டிக் கவிழ்ப்பது போன்றது. இது, நமக்கு அறிவையும் ஆற்றலையும் அளித்த இறைவனுக்கே துரோகம் செய்வது போன்றது.

தனிமனிதனுக்கு ஒரு கேடு வரும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கலாம். சமுதாயத்திற்குக் கேடு வரும் போது எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்.

தனிமனிதனைச் சமுதாயத்தைக் காட்டிலும் பெரிதாக மதிக்கின்ற தொத்துநோய் நம் நாட்டில் நீண்ட நெடு

நாட்களாக வளர்ந்து வருகிறது. அது நல்லதல்ல. தனிமனித மலரிலே சமுதாய மணம் கமழவேண்டும்.

சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய விலங்கினங்கள் காடுகளிலும் மலைகளிலும்தான் வாழ்கின்றன என்பதில்லை. நம்மோடு வாழ்கின்ற பலரின் உள்ளங்களிலும் அவை வாழ்கின்றன-நடமாடுகின்றன. அத்தகைய கொடிய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தும் சமுதாய கேந்திரமே திருக்கோயில்கள்.

ஒருவன் தன்னுடைய உரிமை-மரியாதைகளை எவ்வளவு புனிதமாக்குகிறானோ அந்த அளவிற்கு-ஏன் அதைவிடச் சற்று அதிகமாகவே பிறருடைய உரிமைகளையும் மரியாதைகளையும் கருதிப் போற்றிப் பாதுகாத்துக் கொடுக்கும் பண்பின் வழியில் நாம் வளரவேண்டும்.

வலிவற்றவனுடைய உரிமையையும் உடைமையையும் காப்பாற்றித் தரவேண்டிய பொறுப்பு வலிவுடையவர்களுக்கு இருக்கிறது. வலிவுடையவர்கள் இதைச் செய்யத் தவறிவிட்டனர். சுதந்திர நாட்டில் அப்பாவி மக்களின் உரிமைக்காகப் போராடி எந்தத் தியாகத்தையும் செய்யத் தொண்டர்கள் தயாராக வேண்டும்.

திருவாசகம் தமிழகத்தின் தவநூல்; ஞானப் பனுவல்; பக்திப்பெரு நூல். தத்துவக் கருவூலம்; அறிவுக்

களஞ்சியம் ; பிறவிப் பிணிக்கு அருமருந்து. நெஞ்சை நெகிழ்விக்கும் செந்தமிழ்ப் பாட்டு. மடுவனைய வாழ்க்கையிலிருந்து மலையனைய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் அருட்பாட்டு. அதை ஓதியுணர்ந்து அனுபவியுங்கள்.

இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் வாழ்வுரிமையளிப்பதே கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியம்.

நன்மையை நன்மைக்காகவே செய்யவேண்டும். அதில் வேறு உள்நோக்கம் இருந்தால் செயலில் வெற்றி காண முடியாது.

படிக்கல்லையும் பொருளையும் ஒரு தராசில் போட்டால் இரு தட்டுக்களும் சரியாக நிற்கவேண்டும் என்பது போல உரிமையும் கடமையும் சரிசமமாக இருக்கவேண்டும். உரிமையில்லாமல் கடமையைச் செய்வது கள்ள வாணிகம் போன்றது. கடமையைச் செய்யாமல் உரிமையைக் கோருவது நாணயமும், நேர்மையும், நியாயமும் ஒழுங்கும் அற்றது.

மனிதன் என்றால் அவன் துன்பத்தை மாற்றுகிறவனாக-இன்பத்தை ஆக்குகிறவனாக இருக்க வேண்டும். இந்த ஆற்றல் அற்றவன் மனிதனல்ல-மனித உருவிலே உலவும் விலங்கு.

இன்று இறைவனிடம் சென்று எதைக் கேட்பது என்பதுகூடப் பலருக்குத் தெரிவதில்லை. மளிகைக் கடையில் போய் காய்கறியும், காய்கறிக் கடையில் போய் மளிகைச் சாமானும் கேட்பவர்கள் போல் பலர் இருக்கின் றனர். தமது தேவைகளடங்கிய ஒரு பெரிய விண்ணப்பத் துடனேயே பலர் இறைவனைச் சந்திக்கிறார்கள். கேட்கக் கூடாதனவற்றையெல்லாம் கேட்கிறார்கள். இறைவனிடம் 'குறையுடைய என்னை நிறைவுடையனாக்கு! எனது ஆன்ம வளர்ச்சிக்குத் தேவையான அறிவை, ஆற்றலை, பண்பாட்டை, குணநலன்களைக் கொடு' என்றுதான் கேட்கவேண்டும். 'காசு பணத்தைத்தா! நிலபுலன் களைத்தா!' என்று கேட்கக்கூடாது. அவற்றை அவர் தரமாட்டார். அவற்றைத் தேடிக்கொள்வதற்கான ஆற்றலையும் அறிவையும்தான் அவர் தருவார்.

❀

கூட்டுறவு, ஆற்றல்மிக்கதொரு மந்திரச் சொல் - ஆற்றல் பெற்ற ஒரு நல் ஆசான் - ஆற்றல் பெற்ற ஒரு மருத்துவன். கூட்டுறவாலேயே குடிகள் உயரும் - இந்த நாடும் உயரும். கூட்டுறவினால் அகநிலையும் - புறநிலையும் சமமாக வளரும்.

❀

கூட்டுறவு இயக்கங்கள், கோயில்கள், பஞ்சாயத்துக் கள் ஆகியவற்றில் பங்கேற்பவர்கள் அழுக்காறு, விருப்பு, வெறுப்பு ஆகிய உணர்வுகளினின்று விடுபட்டவர்களாக இருக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக மனச் செழுமையுடையவர்களாகவும் இருக்கவேண்டும்.

எழுத்தாளனுக்கு இப்படியும் ஒரு பொருள் சொல்லலாமோ என்று தோன்றுகிறது. சாதாரணமாக ஒரு தனி மனிதனின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்பதுன்பங்களுக்கு அவனுடைய தலை எழுத்தே காரணம் என்பார்கள்! அதாவது, இங்கு தலைஎழுத்து என்னும்போது அறிவு என்று பொருள் சொல்லுவதில் தவறில்லை. ஒருவனுடைய அறிவுக்குக் காரணமாக அமைவன அவனுடைய கல்வி கேள்விகள்; அவற்றிற்குக் கருவி எழுத்தாளனுடைய படைப்புக்கள். ஆதலால் பிறருடைய தலை எழுத்தை ஆளுகிறவர்கள் எழுத்தாளர்கள் என்றும் சொல்லலாமல்லவா?

நமது எழுத்தாளர்கள் சென்ற காலச் சிந்தனையை உரமாக வைத்து, நிகழ்காலச் சிந்தனையை உணர்ச்சியாக வைத்து, எதிர்காலத்தை உருவாக்க முயலவேண்டும். பழங்கால நந்தவனங்களில் பூத்த நமது அறிவுமலர்களை எல்லாம் பிறநாட்டார் கொய்து சூடிக்கொள்ளத்தக்க முயற்சியில் ஈடுபடும்படி செய்யவேண்டுவது எழுத்தாளர்களின் கடமை.

கவிஞர்களில் மூன்று பிரிவினர் உள்ளனர்; காலத்தை விட்டு ஒதுங்கி நிற்பவர் ஒருவகையினர்; காலத்தோடு கலந்து நிற்பவர் ஒருவகையினர்; காலத்தை வென்று நிற்பவர் ஒருவகையினர்; முதல்வகையினர்க்கு நிகழ்காலம் தெரியும்; காலச்சூழல் தெரியும்; குற்றம் குறை தெரியும்; எனினும் நிறைகாணும் முயற்சியில் ஈடு

படமாட்டார்கள். இரண்டாம் வகையினர் இருக்கிற நிலைக்குச் சமாதானம் கூறுவர். மூன்றும் வகையினர், இருக்கிற தீமையை எடுத்துக்காட்டி, அதை எதிர்த்து நிற்கவேண்டும் எனக் கூறி மக்களுக்கு அதற்கான உணர்ச்சியை ஊக்கத்தை ஊட்டுவார்கள்.

❁

உணர்ச்சியால் உந்தப்பட்டு அந்த உணர்ச்சியை அறிவுக் கால்களின் வழிச்செலுத்தி, அனுபவம் என்ற நீரைச் செயல் என்ற கழனியில் பாய்ச்சும்போதுதான் நல்ல பயன் ஏற்படும். எனவே உணர்ச்சிதான் இலக்கியப் படைப்புக்கு ஆதாரமாக அமைகிறது!

❁

சமுதாயத்தில் காணப்பெறும் குறையைப் போக்கி, நிறைவை ஏற்படுத்தி அந்த நிறைவை நோக்கி மனித சமுதாயத்தை இழுத்துச் செல்வனவே இலக்கியப் படைப்புக்கள்.

❁

கோயிலுக்குச் செல்லும் வழியில், நடைபாதையில் பளுவான - பெரிய பட்டியல்கற்கள் பதிக்கப்பெற்றிருந்தன. அவற்றில் ஒரே ஒரு கல் மட்டும் தன் நிலையிலிருந்து மேலே எழும்பி, நடப்போரின் கால்களைப் பதம் பார்த்த வண்ணம் இருந்தது. ஒரு நாள் தவத்திரு அடிகளார் அவர்கள் அந்தக் கல்லைக் காண நேர்ந்தது. உடனே அந்தக் கல்லைப் பெயர்த்தெடுத்து மீண்டும் பதிக்கும்படி

கட்டளையிட்டார்கள். ஆறேழு வேலைக்காரர்கள் கனத்த கடப்பாரைகளின் துணைகொண்டு அந்தக் கல்லை மிகவும் சிரமப்பட்டுப் பெயர்த்தெடுத்தார்கள்! என்ன வியப்பு! உள்ளே சுமார் ஒன்றரை முழம் நீளமுள்ள - கடப்பாரை போன்ற பருமனுள்ள ஒரு பசியவேர் - பசுமரத்தின் வேர் ஓடிக்கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. வேரை வெட்டி எடுத்துவிட்டு மீண்டும் அந்த ஆறேழு வேலைக் காரர்களும் சேர்ந்து முழு முயற்சியோடு அந்தக் கல்லைப் பதித்தார்கள். இந்தக் காட்சி தவத்திரு அடிகளார் அவர் களின் மனத்தில் மின்னல் போலப் பளிச்சிட்டு, ஓர் அழ கான உவமையாக வெளிவந்தது. "பல டன் எடையுள்ள- பலர் சேர்ந்து முழு முயற்சியுடன் பெயர்க்கக்கூடிய இந்தப் பெரிய கல்லை ஒன்றரையடி நீளமுள்ள இந்த வேர் நெம்பித் தூக்கிவிட்டது. இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது? கல் பல டன் எடையுள்ளது. ஆனாலும் அதற்கு உயிரோட்ட மில்லை. வேரோ சுமார் ஒன்றரை முழ நீளமிருந்தாலும் அதற்கு உயிர்ப்பு இருக்கிறது—உயிரோட்டமிருக்கிறது. அது பசுமரத்தின் வேர். உயிரோட்டமில்லாத பட்ட மரத் தின் வேர் ஒன்றை இந்தக் கல்லுக்கு அடியில் போட்டால் வேர் நசுங்கிப் போகும். மனிதனும் இப்படித்தான்! அவன் நாளும் சிந்தனையால் செயலால் வளரும் சக்தி படைத் தவனாக—உயிரோட்டமுள்ளவனாக இருந்தால் அடுக்கடுக் காகத் துன்பங்கள் வந்தாலும் அவற்றை எதிர்த்து நின்று வெற்றி பெற்றுவிடலாம். மனிதனுக்கு உயிரோட்டமிருக் கிறது என்பதன் அடையாளமே அவன் நாள்தோறும் சிந்தனையால் செயலால் வளர்வதுதான்!" என்று கூறி முடித்தார்கள். பக்கத்தில் இருந்த அனைவரும் அடிகளார் அவர்களின் உவமையின்பத்தில் மூழ்கித் திளைத்தார்கள். எவ்வளவு அழகான உவமை!

அடிக்கடி வண்ணம் மாறுகிற சென்னைத்துணி (Bleeding Madras) போல மனித மனம் அடிக்கடி மாறுகிற தன்மையுடையதாக இருக்கின்றது.

காவிரி கடலோடு கலப்பது உண்மை; ஆனாலும் கடல்நீர் முழுவதும் காவிரிக்கு வந்துவிட்டால் காவிரி நீரின் சுவை கெட்டுவிடும். இரண்டுக்கும் உறவில்லை யென்றாலோ, காவிரியின் ஊற்றுவளம் குன்றும். எனவே, காவிரியும் வேண்டும் - கடலும் வேண்டும். காவிரிக்கும் கடலுக்கும் உறவு இருப்பது போல, உலக மொழி களோடும், இந்திய மொழிகளோடும் தமிழுக்கு உறவிருக்க வேண்டும். ஆனாலும், அவற்றோடு கலந்துவிடாமல், தமிழ் தன்னுடைய தன்மையை தகுதிப்பாட்டை இழந்து விடாமல் பாதுகாக்கப் பெறவேண்டும். நம்முடைய தமிழினத்தினுடைய தமிழ் உணர்வும் ஆற்றலும் முயற் சியும் இதற்குப் பயன்படவேண்டும்.

செடிகளில் மலர்கள் பூத்துக் குலுங்குவது மக்களுக்கு மகிழ்ச்சி தருவதற்கு என்பதுபோல, நம்முடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்கதாக அமைய வேண்டும்.

வண்டிக்கு பிரேக் அவசியமாக இருத்தல் போல, மனிதர்களுக்கு அவர்களின் இயல்பான உணர்ச்சிப் போக்குக்குத் தடைபோட்டு ஆற்றுப்படுத்தும் நண்பர்கள் தேவை.

கொடியும் கொம்பும் ஒன்ருகிவிடுவதில்லை. ஆனுலும் அவை இரண்டுக்கும் உறவிருக்கும். இவ்வாறு கொடிக்கும் கொம்புக்கும் உள்ள உறவு போல உலகின் எல்லா மொழி களோடும் தமிழுக்கு உறவு இருக்கவேண்டும். அப்போது தான் தமிழ் தழைக்கும்.

அரைக்கீரை கிள்ளக் கிள்ளத் துளிர்த்து வளர்வது போல ஆற்றல் நிறைந்த மனிதன் துன்பத்தால் தாக்கப் பெறத் தாக்கப்பெற அவன் ஊக்கமும் உற்சாகமும் பெறு கின்ருன். கோழைகள் பகைவரால் அழிக்கப்படுகிருர்கள்.

திருக்கோயிலுக்குள் நாம் நுழையும்போது காற் செருப்பை வெளியே கழற்றி வைத்துவிட்டுப் போவது போல, பஞ்சாயத்துக்குள் நுழைபவர்கள் தனி மனித உணர்வு, சாதிய உணர்வு ஆகியவற்றையெல்லாம் வெளியிலேயே விட்டுவிட்டுப் போகவேண்டும்.

உத்திரத்திலோ சுவரிலோ புகை படிவது போலவே மனித மனத்தில் தீமைகள் படிகின்றன. புகை கொஞ்சம் கொஞ்சமாகவே படியும். தீமையும் அப்படித்தான்!

இங்குள்ள பற்றுக்குறைகளை நிறைவு செய்துகொள்ள-அனுபவிக்க மனிதன் அறிவியல் உதவியோடு சந்திர மண்டலத்திற்குப் போகிருன். அங்கு போய் வாழ்க்கையை

அனுபவிக்க முடியாமல் பகைமையை வளர்த்துச் சண்டை போட்டுக்கொண்டால் வளர்ந்த அறிவியலால் என்ன பயன்? அது போல, பாலை நன்றாக வற்றக் காய்ச்சிச் சுவை யுண்டாக்கிக் குடிக்கப் போகும்போது சண்டை போட்டுக் கொண்டு பாலைக் கொட்டிக் கவிழ்த்துவிட்டால் என்ன பயன்? இத்தகையதொரு நிலை ஏற்படாமல் காக்கச் சமயம் (அருளியல்) தேவை.

இன்றையச் சமுதாய வாழ்க்கை கலைந்த வீடுபோல் காட்சியளிக்கிறது. கலைந்த வீட்டில் குடியிருப்பது என்பது எப்படி முடியாதோ அது போலவே, அன்பிலும் உறவிலும் வாழவேண்டிய சமுதாயம் தம்முள் கலைந்துவிடுமாயின் மனித சமுதாயம் வாழ முடியாது!

மழை பெய்து புரண்டுவரும் தண்ணீரைக் கால்வாய் களின் வழிக்கொணர்ந்து ஏரிகளில் தேக்கிக் கழனி களுக்குப் பாய்ச்சும் போதுதான் உரிய பயன் ஏற்படுகிறது. அது போல, மனிதனிடம் தோன்றும் இயல்பான உணர்ச்சி களை அறிவுக் கால்வாய்கள் வழிச் செலுத்தி அனுபவம் என்ற ஏரியில் தேக்கிச் செயல்முறை என்ற கழனியில் செலுத்தினால்தான் உரிய பயன் விளையும். சிந்திக்காத மனிதனின் உணர்ச்சிகள் பொட்டல் காட்டில் பெய்த மழையைப்போலப் பயன்படாமல் போய்விடும்.

சாம்பாரில் கடுகு அதிகமாகிப் போனால் சாம்பார் கசக்கும். பருப்பு அதிகரித்தால் சுவைக்கும். தன்னலம்

பெருகுவது கடுகு அதிகரிப்பது போல. பொதுநலம் பெருகுவது பருப்பு அதிகரிப்பது போல.

❋

சந்தைக்குச் சென்று கீரைக்கட்டு வாங்கும்போது பூச்சிக்கீரைகளை ஒதுக்கி நல்ல கீரைதானா என்று பார்த்து வாங்குகிறோம். ஆனால், தரமான இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதில் கீரைக்கட்டு வாங்குவதில் காட்டும் அளவு அக்கறைகூடக் காட்டுவதில்லையே !

❋

நங்கை ஒருத்தி தன் உடலை நலமாகவும் அழகுப் பொலிவுடையதாகவும் வைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதின் மூலம் அவள் தனது கணவனுக்கு இன்ப நலனும் மகிழ்வும் ஊட்டுகின்றாள் என்பது உண்மை. ஆனால் அதே காலத்தில் தான் நோயுருவண்ணமும் காப்பாற்றிக்கொள்ளுகிறாள் என்பதை மறந்துவிடக் கூடாது.

❋

நாம் நமது கடமைகளைச் செய்வதன் மூலம் நம்முடைய வாழ்க்கையை இலட்சியச் சார்புடையதாக்கி அவ்வழிப் பயனுடையதாக்கி மறுமை இன்பம் பெறுகிறோம் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

❋

நான்கு புறமும் சாளரம் உள்ள வீட்டில்தான் நல்ல ஆரோக்கியமான காற்றோட்டம் இருக்கும் ; அதுபோல

நாம் பல மொழிகளையும் பயில்வதன் மூலமே நமது தாய் மொழி செழுமையுறும்.

கற்ற கல்வியை மறந்துவிடுவது என்பது சம்பாதித்த பணத்தை தெருவிலே போட்டுவிட்டு வருவது போன்றது. கற்ற கல்வியை மறந்துவிட்டால் அது உற்ற நேரத்தில் கைகொடுத்து உதவாது.

நாம் பல்வேறு வகையான உணவுகளையும் சாப்பிட்ட பிறகு கொஞ்சம் ஊறுகாயைச் சாப்பிட்டால் நாம் சாப் பிட்ட உணவனைத்தும் செரித்து ஊறுகாயின் மணம் மட்டும் மேலெழுந்து நிற்பது போல மதமும், கடவுள் நம்பிக்கையும் நம்மிடமுள்ள வஞ்சம், பொய், களவு, சூது, சினம் ஆகியவற்றைச் சீரணிக்கச் செய்து அன்பையும் சகோதரத்துவத்தையும் மேலெழுந்து நிற்கச் செய்யும்.

ரோஜா மலர் மணத்தால் வண்ணத்தால் பலருக்கும் விருந்தளிக்கிறது. அது போல, மனிதனும் காட்சியாலும் செயலாலும் மற்றவர்களுக்கு இன்பமளிக்கவேண்டும். அது மனிதன் கடமை.

ஒலிப்பதிவு நாடாவில் (Tape Recorder) நாம் ஒலிப்பதிவு செய்ததையே மீண்டும் கேட்கிறோம். புதிதாகக்

கேட்க முடிவதில்லை. அப்படிப் புதியது கேட்க விரும்புவோமானுல் அழித்துவிட்டுப் புதுப்பதிவு செய்யவேண்டும். அது போல, நம் உயிரின் ஒலிப்பெட்டியில் நாம் எண்ணியனவும் சிந்தித்தனவுமே பதிகின்றன. அவையே நம்மை நிழல் போலத் தொடர்கின்றன.

❋

இரும்பை நெருப்பில் போட்டுச் சூடுண்டாக்கிச் சம்மட்டியால் அடித்தால்தான் அது வில்லாக வளையும் என்பது போல, மனிதனை நோன்பால் வருத்திப் பக்குவப்படுத்தினுல்தான் அவன் பயன்படும் மனிதனுவான்.

❋

சமையற்காரர்களின் திறமையைப் பொறுத்துச் சமையலின் சுவை அமைவது போல, ஆசிரியர்களின் திறமையைப் பொறுத்தே மாணவர்களின் எதிர்காலம் அமையும்.

❋

ஒன்றை நிறுத்துக் காட்டுகின்ற தராசின் முள் மட்டும் தனித்துக் கிடக்குமானுல் அதற்குக் கடமையுமில்லை, சிறப்புமில்லை. அதே முள் தராசில் இணைக்கப் பெறுமானுல் கடமையுண்டு - சிறப்பும் உண்டு. அப்பொழுது அம்முள் குறையையும்,நிறையையும் காட்டவேண்டும். அது போல, மனிதர்கள் பொறுப்புள்ளப தவிகளைப் பெறுவார்களானுல், அப்பதவிகளுக்கு ஏற்படக் கடமைகளுண்டு. குறை நிறை காட்டும் கடமை புரியாத தராசு—ஓட்டைத் தராசு. கடமையைச் செய்யாமல் பதவியில் வீற்றிருப்பவர்கள் உபயோகமற்றவர்கள் ; உதவாக்கரைகள்.

மரம் செழித்து வளர வேண்டுமானால் அந்த மரம் தங்கி முளைக்கும் மண்ணைச் செழிப்பாக்க வேண்டும். மதம் செழித்து வளர வேண்டுமானால் அம்மதத்தைத் தழுவுகிற-அம்மதத்தில் வாழுகிற மனிதர்களின் வாழ்க்கையைச் செழிப்பாக்க வேண்டும்.

கேணிச்சுவர் வெள்ளியால் கட்டப் பெற்றிருந்தாலும், வாளி தங்கத்தால் செய்யப் பெற்றிருந்தாலும், கயிறு வெள்ளியினால் செய்யப் பெற்றிருந்தாலும் அந்தக் கேணியில் இறைக்கும் நீர் குப்பென்று நாற்றமடித்தால் என்ன பயன் ? அது போல, மனிதன் மாடமாளிகையில் வாழ்ந்தாலும், கூட கோபுரத்தில் குடியிருந்தாலும், எல்லா இன்பங்களையும் அனுபவித்தாலும் அவனிடத்தே அன்பும். ஆன்மீக உணர்வும், மனிதப் பண்பும் இல்லையானால் என்ன பயன் ?

சாப்பிடுகிற மனிதனுக்குப் பசி நீங்கவேண்டும்; குளிக்கிற மனிதனுக்கு உடல் அழுக்கு நீங்கி வெப்பம் தணிய வேண்டும் என்பன போல, வழிபாடு செய்கிற மனிதனுக்கு உள்ளத்தில் உள்ள வெப்ப நோய் நீங்க வேண்டும். இல்லையானால் வழிபாட்டால் என்ன பயன் ?

தண்ணீருக்கும் தாமரைக்கும் இருக்கிற உறவு போல, மண்ணுக்கும் மரத்திற்கும் இருக்கிற உறவு போல தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டும்.

விண்ணேக்கிச் செல்லும் பொருளை மண்ணேக்கி இழுக்கும் ஈர்ப்புச் சக்தி மண்ணுக்கு இருப்பது போல, மேல்நோக்கிப் பறக்கின்ற மனிதனைக் கீழ்நோக்கி இழுக்கின்ற ஆற்றல் வஞ்சனை பொய் களவு சூது சினம் ஆகியவற்றிற்கு உண்டு. அவற்றின் ஆற்றலை அடக்கி மனிதனை மாமனிதனுக ஆக்கும் சக்தி மதத்திற்கும் கடவுள் நம்பிக்கைக்கும் உண்டு.

✻

மாறுதலும் முன்னேற்றமும் சமுதாயத்தின் உயிர்ப் பண்பு. இவ்வுயிர்ப் பண்பை இழந்த சமுதாயம் வளராது-வாழாது. அது ஓட்டம் தடைப்பட்டு நின்ற குட்டை போல தேங்கிக் கெட்டுவிடும்.

✻

ஆறுகளுக்குத் துறை பலவாருக இருக்கலாம்; ஆனுலும் நாம் ஒரு நேரத்தில் இறங்கிக் குளிக்க ஒரு துறையே பயன்படும். அது போல, இறைவனுக்குப் பெயர்கள் பலவாக இருக்கலாம் — பல வடிவங்களும் இருக்கலாம். எனினும் நாம் அனுபவித்து மகிழ - பயன் பெற ஒவ்வொருவரும் - ஒரு நாமத்தையே உறுதியாகக் கொள்ளவேண்டும்.

✻

தேனிலோ உப்பிலோ ஊறிய பொருள் அவற்றின் சுவையைப் பெறுவது போல, இறைவனுடைய திருவருளை நினைந்து நினைந்து அந்த இன்ப அனுபவத்தில் ஊறித் திளைத்தவர்கள் அருள் வசமாகிவிடுவார்கள்.

சமூகம் என்பது ஒரு சீன வெடிக்கட்டுப் போன்றது ; சீன வெடிக்கட்டில் ஓரிடத்தில் தீ வைத்தாலும் கட்டு முழுவதும் வெடிப்பது போல, சமூகத்தில் எங்கேனும் ஒரு மூலையில் தீமை பற்றினால் அது சமூகம் முழுவதையுமே பற்றத்தான் செய்யும்.

நிலத்தை உழுதல் வளப்படுத்துதல் பயிர் செய்தல் பயிர்களைப் பாதுகாத்தல் முதலான அனைத்துமே விவசாயத் தொழில்கள்தாம் என்பது போல, மனித குலத்திற்கு நல்லறிவு தருதல், நலத்தைப் பாதுகாத்தல், வறுமை பிணி பகை முதலியவற்றிலிருந்து பாதுகாத்தல் ஆகிய அனைத்துமே சமயத் தொண்டுகள்தாம்.

கழனிகள் இல்லையேல் விளை பொருள்கள் இல்லாமற் போவது போல, மக்கள் மன்றம் இல்லையேல் சமயம் இல்லாமற் போகும்.

நமக்கு இருக்கிற நிலபுலன்களையும், சொத்துக்களையும் நாம் நமது வாரிசுகளுக்குப் பத்திரம் செய்து கொடுப்பது போல, நமது அருளாளர்களும், ஞானியர்களும் நமக்களித்திருக்கிற அருட்பாடல்களையும், அறவுரைகளையும் நமது பரம்பரைக்கு நாம் பத்திரம் செய்து கொடுத்துப் படிக்கச் செய்து சொந்தமாக்கிக் கொள்ளும்படி செய்யவேண்டும்.

கரித்துண்டை என்னதான் பாலூற்றிக் கழுவினாலும் கரித்துண்டு பாலின் நிறத்தைப் பெறாதது போல, எட்டிக்

காயை என்னதான் தேனில் ஊறப் போட்டாலும் எட்டிக் காய் தேனின் இன்சுவையைப் பெருதது போல கீழ்மைக் குணம் படைத்த கயவர்களே எவ்வளவுதான் திருத்த முயன்ருலும் அவர்கள் திருந்தி நல்லவர்களாக மாட் டார்கள். மாருகக் கரித்துண்டு பாலேத் தன் நிறத்திற்கு மாற்றிவிடுவது போல, கீழ்மைக் குணம் படைத்த கயவர் கள் நல்லவர்களேயும் கெடுத்துவிடுவார்கள்.

❋

உரிமையைக் கடமையாகச் செய்தால்தான் உரிமை சிறக்கும். உரிமை மட்டும் இருந்து கடமை சிறக்கவில்லே யாளுல் அந்த உரிமையும் சிறப்பிழக்கும். பயிரைப் பாது காக்க வேலி இருப்பது போல உரிமையைப் பாதுகாக்க கடமை இருக்கிறது.

❋

நாள்தோறும் உடலில் சேரும் அழுக்கைக் குளிப்பதன் மூலம் தூய்மைப்படுத்திக்கொள்வது போல-நாள்தோறும் உடையில் சேரும் அழுக்கைத் துவைப்பதன் மூலம் தூய்மைப்படுத்திக்கொள்வது போல நாள்தோறும் உள் ளத்தே எழும் துன்பங்களேயும் துயரங்களேயும் இறைவனே நோக்கி அழுவதன் மூலம் போக்கித் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த அழுகை இதயத்திலிருந்து பொங்கிவரவேண்டும். அதுதான் பிழையைத் திருத்தும்-பிழையிலிருந்து நம்மை விடுவிக்கும், பிறப்பைத் தடுக்கும், பேரின்பத்தை அளிக்கும்.

❋

படிப்பவர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் பொறுத்தே பத்திரிகைக்குப் பெருமை என்பது போல

ம்பிடுகிறவர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் பாறுத்தே நெறிக்கும் கடவுளுக்கும் பெருமை ஏற்படும்.

❋

பாலிலே தண்ணீர் கலப்பதும், அரிசியிலே கல்லைக் லப்பதும் எவ்வளவு பெரிய குற்றமோ அதைவிட பெரும் குற்றம் சிந்தனையிலே நஞ்சு கலந்து மக்கள் த்தியிலே உலவ விடுவது.

❋

வீடில்லாதவர் வாழ்க்கையில் வெய்யில் வருத்துவது போல சமூகம் இல்லாதவர் வாழ்க்கையில் பகை வருத்தும். வீடில்லாதவர் வாழ்க்கையில் குளிர் வருத்துவது போல சமூகம் இல்லாதவர் வாழ்க்கையில் அழுக்காறு வருத்தும். சமூ வாழ்க்கை மிக மிக முக்கியமானது. அதுதான் கடவுள் பக்தி என்று நான் கருதுகிறேன்.

❋

உள்ளத்தில் உள்ள சக்திதான் பக்தி. அதைப் பயன் படுத்திச் செயலாக்குவதுதான் தொண்டு. பக்தியும் தொண்டும் உடலும் உயிரும் போல; மலரும் மணமும் போல.

❋

வான மழை பொழிந்தால் மண்ணில் மரம் செடி கொடிகள் தழைக்கும் என்பது போல மனித மனத்தில் அன்பு மழை பொழிந்தால் மனித சமுதாயம் செழிக்கும்!

❋

குழந்தைகளின் மனம் சுறுசுறுப்பாக இயங்கும் ஆற்றல் மிக்கதோர் இயந்திரம் போல. அது, எதையும்

படம் பிடித்துக்கொள்ள சகதி வாய்ந்த ஒரு காமிரா. எனவே, குழந்தைகளிடத்தில் மிகவும் கவனமாகவும் பொறுப்புடனும் பழக வேண்டும். அவர்களுக்கு நல்ல காட்சிகளையும் நல்ல சூழலையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

❋

மக்களுக்கு மணமும் தேனும் தந்துதவுகிற மலர்களை இறைவன் விரும்புவது போல, மக்களுக்கு அன்போடும் பண்போடும் உதவி செய்கின்றவர்களையும் இறைவன் விரும்புவான்.

❋

பக்தியும் தொண்டும் ஒரு நாணயத்தின் இரு புறங்களைப் போல, கண்களை மூடிக்கொண்டு பஜனை செய்கின்ற அளவிலேயே நிற்பது பக்தி. மனிதன் அசைய ஆரம்பித்ததும் தொண்டு மலர்கிறது. பானைக்குள் இருக்கும் தண்ணீரைத் தூய்மையாக வைத்துக் காப்பது பக்தி. அதனை அள்ளிக் குடிக்கும்படி செய்வது தொண்டு.

❋

கட்டுச்சோறு மறுநாள் பயணத்திற்குப் பயன்படுவது போல, குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் கல்வி அவர்களின் எதிர்காலத்திற்குப் பயன்படக்கூடியதாக இருக்கவேண்டும்.

❋

பெய்கின்ற தண்ணீரைத் தனக்கு உணவாக ஏற்றுக் கொள்ளாத செடிகொடிகள் செழித்து வளராதது போலக் கற்கின்ற கல்வியை-அந்தக் கல்வியின் மூலம் கிடைக்கக் கூடிய சிந்தனையை உணவாக ஏற்றுக்கொள்ளாத குழந்தைகள் சிறந்து வாழமுடியாது.

❋